
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#929**
**Mar-April 2022**

**பொருளடக்கம்**


✡ வானத்திலிருந்து இறங்கின அப்பம் ........ 2

✡ பகிர்ந்து கொடுக்க மறாவாதிருங்கள் ...... 10

✡ பகுத்தாராயும் சிலாக்கியத்தை புரிந்து கொள்ளுதல் ....... 13

✡ தகுதியானதும் தகுதியற்றதுமான இலட்சியங்கள் ........... 16



**BS Tamil Version - 71** **2022**

# வானத்திலிருந்து இறங்கின அப்பம்

The bread from Heaven

**“நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம், இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான், நான் கொடுக்கும் அப்பம், உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தை பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை.” (யோவான் 6:51,53).**

இந்த வார்த்தைகள் பேசப்பட்ட காலத்திலும் (யோவா. 6:41,42,52,60,61,66) இக்காலத்திலும் அநேகர் இந்த வார்த்தைகளின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள தவறுகிறார்கள் அல்லது தவறாக புரிந்து கொள்ளுகிறார்கள். ஆகையால் அவற்றின் உண்மையான அர்த்தத்தை இந்த ஞாபகார்த்த சமயத்தில் நம்முடைய மனங்களில் மீண்டும் புதுப்பித்துக் கொள்வது தகுதியாயிருக்கிறது. நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாக தம்மை நினைவு கூரும் வகையில் கர்த்தர் பஸ்கா இராப்போஜனத்தை துவக்கி வைத்த போது, அவர் புளிப்பில்லாத அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, **“நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. (குறித்துக் காட்டுகிறது): என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.”** (1 கொரி. 11:24). அடையாளமான அப்பத்திலிருந்து இயேசுவின் சரீரத்தைப் பார்க்கையில்,அது வானத்திலிருந்து இறங்கின மெய்யான அப்பமாக இருந்ததை நாம் உணர்ந்து கொள்கிறோம். பிதாவாகிய தேவன் தான், இயேசுவை இந்த அப்பமாகும்படி பரிசுத்தப்படுத்தி (பரலோகத்திலுள்ள பிற ஆவி ஜீவிகளிடமிருந்து அவரைப் பிரித்தெடுத்து) உலகத்தில் அவரை அனுப்பினார். (யோவா. 10:36). மேலும் இயேசு: **“என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்”** (யோவா. 6:38) என்று சாட்சி கொடுக்கிறார். அவருடைய ஆத்துமா அல்லது ஜீவன் பூமியில் அல்ல, ஆனால் பரலோகத்தில் சிருஷ்டிக்கப்பட்டது என்ற கருத்தில் அவர் வானத்திருந்து இறங்கி வந்தார் என்றும், ஒரு மானிட ஜீவியாக அவர் மாம்ச சித்தத்தின்படி ஜெனிப்பிக்கப்படாமல் அவர் நிலை மாற்றம் செய்யப்பட்ட ஜீவியாயிருந்தார் என்ற அர்த்தத்திலும், **“அந்த வார்த்தை** (லாகோஸ் –மனுஷனாவதற்கு முன்பிருந்த இயேசு – Logos) **மாம்சமானார்”** (அதாவது ஒரு மானிட ஜீவியாக ஆனார்) (சொல்லர்த்தமான மொழிபெயர்ப்பு) (யோவான் 1:14 – டயக்லாட்).

பிலி. 2:6,7–ல், இயேசு தாம் மனிதனாவதற்கு முந்தின நிலைமையில் தேவனுடைய சாயலாக இருந்து (தேவன் இருக்கும் நிலையில், அதாவது ஒரு ஆவி ஜீவி




நிலையில்) தேவனுக்கு சமமாயிருப்பதை பற்றிக் கொண்டிருக்காமல் (ARV; சாத்தான் நடந்து கொண்டது போலல்லாமல் – ஏசா. 14:13,14) அதற்கு மாறாக தம்மைத்தாமே வெறுமையாக்கி (மனுஷனாவதற்கு முந்தின அவருடைய சுபாவம், உத்தியோகம் மற்றும் கனம்) அடிமையின் ரூபமெடுத்து, (அவருடைய முந்தின நிலையாகிய உத்தியோகம் மற்றும் ஆளுகைக்குரிய கனம் இல்லாமல்) மனுஷர் சாயலானார் (தாழ்ந்த சுபாவமாகிய மனுஷ நிலைக்கு மாறினார்) என்று நாம் கற்றுக் கொள்கிறோம். 2 கொரி. 8:9–ல் அவர் ஐசுவரியமுள்ள வராயிருந்தும் (தெய்வீக சுபாவம் தவிர எல்லா நிலைகளுக்கும் மேலான நிலையில் தேவன் நீங்கலாக எல்லா உத்தியோகங்களுக்கும் மேலான நிலையில் யேகோவா தேவனுக்கு பிரதானமாக ஊழியம் செய்யும் நிலையில் இருந்தார். மேலும் தேவன் நீங்கலாக எல்லா கனங்களுக்கும் மிக மேலான நிலையில் நல்ல தூதர்கள் மற்றும் மனுஷராலும் மனப்பூர்வமாய் கொடுக்கப்பட்ட கனத்துக்குரியவராக இருந்தார்), நமது நிமித்தம் (நம்முடைய நலன்களுக்காக) தரித்திரரானார். (சுபாவத்தில் ஒரு மனுஷனாக; உடமையைப் பொருத்தவரையில் தலை சாய்க்கவும் இடமில்லாதவராகவும்; உத்தியோகத்தில் ஒரு அடிமையாகவும்; மனுஷருடைய கண்களில் ஒரு அலைந்து திரியும் வெறுப்புக்குரிய போதகராகவும்; உடன் கூட்டாளிகளில் அவரைப் பின்பற்றுபவர்களில் ஒருவரும்

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8556) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, **Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

இல்லாதவராகவும், கனத்தில் அசட்டை பண்ணப்பட்ட வராகவும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவராகவும், தேவதூஷணஞ் சொல்பவர் என்று குற்றஞ் சாட்டப்பட்டு, துன்பப்படுத்தப்பட்டவராகவும், விலக்கப்பட்டவராகவும், அதோடுகூட மனிதர்களுடைய அரசாங்கத்திற்கு எதிராக கலகம் செய்கிறவர் என்று நிரூபணமின்றி உறுதி செய்யப்பட்டு குற்றவாளியாகச் சிலுவையில் அறையப் பட்டார்). அவருடைய தரித்திரத்தினாலே நாம் (அவரைப் பின்பற்றுகிறவர்கள்) ஐசுவரியவான்கள் (விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிற நிகழ்கால ஆசீர்வாதங்களிலும் சத்தியம், நீதி, அன்பு மற்றும் பரலோக சிந்தைக்குரிய வல்லமை ஆகியவற்றின் வழிகளில் நம்முடைய அழைப்பிலும், ராஜ்யத்தில் எதிர்கால ஆசீர்வாதங்களிலும்) ஆகிறோம்.

ஆனால் வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பம் ஏன், நமக்காக நொறுக்கப்பட்டு கொல்லப்பட வேண்டியது அவசியமாயிருந்தது? அது ஏனென்றால், நாம் நம்மில் ஜீவனைக்கொண்டிருக்கவில்லை. மரணமானது கிரியை செய்து கொண்டு முழு மனுக்குலத்தையும், விழுங்கி கொண்டிருந்தது. ஆதாம் மட்டுமே மரண ஆக்கினைத் தீர்ப்பின் கீழ் இருந்தார் என்று நினைப்பது தவறு. அப்போஸ்தலன் எபே. 2:3-ல், "**சுபாவத்தினாலே** (பரம்பரை வழியாக) **மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.**" (மரண ஆக்கினைத் தீர்ப்பு - ரோம. 1:18,32) என்று சொன்னபோது மொத்த மனுக்குலமும் ஆதாமுடன் மரணத்தை மட்டும் பகிர்ந்து கொள்ளாமல் மரண ஆக்கினைத் தீர்ப்பையும் பகிர்ந்து கொண்டார்கள் என்று மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். (ரோம. 5:12-19) இந்த மொத்த பகுதியிலுமிருந்தும் குறிப்பாக வசனம் 16 மற்றும் 18-க்கும் இடையே சொல்லப்பட்டிருக்கிற கருத்தை நாம் கவனிப்பதால் இது தெளிவாகிறது. வசனம் 16 ஆதாமின் மேல் வந்த நியாயத்தீர்ப்பு குற்றத்திற்கான ஆக்கினைத்தீர்ப்பு என்று தெரிவிக்கிறது. மேலும் வசனம் 18, குற்றத்திற்கான இந்த ஆக்கினைத் தீர்ப்பு ஆதாமின் மூலமாக எல்லா மனுஷர் மேலும் வந்தது என்பதை விவரித்துக் காட்டுகிறது. ஒரு மனுஷனுடைய மீறுதலின் விளைவு எல்லா மனுஷர் மீதும் சாபத்தைக் கொண்டு வந்தது. முழு மனுக்குலமும் மரணத்தை மட்டுமல்லாமல் மரண ஆக்கினைத் தீர்ப்பையும் கூட ஆதாமிடமிருந்து சுதந்தரித்துக் கொண்டது.

1 கொரி. 15:22: "**ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல**" என்ற வசனத்திலிருந்தும் இது தெளிவாகிறது. ஆதாமுக்குள் எல்லாரும் உண்மையாகவே மரண நிலைமைக்குள் பிரவேசிக்கிறார்கள் என்பதை இது அர்த்தப்படுத்தாமல், ஆதாமுக்குள் இருக்கிற எல்லாரும் மரண ஆக்கினைத் தீர்ப்பின் கீழ் இருக்கிறார்கள் என்பதை அர்த்தப்படுத்துகிறது. தேவனுடைய முழு திட்டமும் மிகவும் முக்கியமாக, அதன் தனிச் சிறப்பு வாய்ந்த மையக் கருத்தான மீட்கும் பொருள் உபதேசம், மனுக்குலத்தார் அனைவரும் ஆதாமுக்குள் மரண ஆக்கினையின் கீழ் இருக்கிறார்கள் என்றும் மேலும் ஆதாமிடமிருந்து அபூரணமான ஜீவனை சுதந்தரித்துக் கொண்டதின் காரணமாக மாத்திரமல்ல மரணத்துக்கேதுவான அபூரணமான சூழ்நிலைகள் மத்தியில் தன் ஜீவிய காலத்தை செலவழிக்க வேண்டியிருப்பதாலும், அதோடுகூட அதன் மீது ஆதாமிடமிருந்து சுதந்தரித்துக் கொண்ட மரணம் வரையான தேவ நீதியின் தீர்ப்பும் சுமத்தப்பட்டிருக்கிற காரணத்தினாலும் (யோவா. 3:36) மரித்துக் கொண்டிருக் கிறது என்ற கருத்தை மைய ஆதாரமாகக் கொண்டிருக் கிறது. இந்த ஆக்கினைத் தீர்ப்பு ஆதாமுக்குள் எல்லார் மீதும் மறைமுகமாக அதாவது அவன் மூலமாக வந்திருக்கும் போது அது அவர்களையும் சேர்த்துக் கொண்டது. அது மறைமுகமாக இருந்தாலும் கூட அந்த ஆக்கினைத்தீர்ப்பு உண்மையாகவே அவர்களையும் சேர்த்துக் கொண்டது. இந்த கருத்தை மறுப்பதென்பது தர்க்கரீதியாக மீட்கும் பொருள் உபதேசத்தை மறுப்பதாகும்.

ஆதாம் பாவம் செய்த போது, அவனுடைய சந்ததியார் முழுவதும் அவனுடைய அரையிலிருந்தவர்களாய் மரணத்திற்கேதுவான ஆக்கினைத் தீர்ப்பின் கீழ் வந்த படியால் ரோம. 5:12-ல் "**இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று**" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை சுலபமாக புரிந்து கொள்கிறோம். நாம் அப்போது பிறவாதிருந்த போதிலும், நாம் ஆதாமின் அரையில் தான் இருந்தோம். ஆகவே அவன் பாவஞ்செய்த போது, அவனுடைய ஒரு பாகமாயிருந்தோம். ஆதாமின் சந்ததியார் எல்லாரும் அதே மரணத்துக்கு ஏதுவான ஆக்கினைத் தீர்ப்பின்கீழ் இருப்பதால், ஒருவரும் தனக்கென்று ஜீவனை அடைந்து கொள்ளவோ ஒருவனாவது தன்னுடைய சகோதரனை எவ்விதத்தினாலாவது மீட்டுக் கொள்ளவோ அல்லது அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்கு கொடுக்கவோ கூடாமல் இருந்தது. (சங். 49:7) - எல்லாரும் மரணத் தீர்ப்புக்குள்ளாக்கப்பட்டு மரித்துக் கொண்டிருந்தனர். ஆனால் மனிதனுடைய முடிவான நிலை, தேவன் இரக்கம் காட்டும் சந்தர்ப்பமாகியது. தேவன் ஒருவரை மனுக் குலத்துக்காக அருளினார். அவர் அதே மனித இனமாக இருந்த காரணத்தால் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்ட ஆதாமின் சந்ததியாக இல்லாமல் (ஆனால் பரத்திலிருந்து வந்தவர்) ஆதாமுக்கும், அவன் அரையிலிருந்த அவன் சந்ததிக்கும் மீட்கும் பொருளை (சரிநிகரான விலை) கொடுக்கவும், ஏற்றுக் கொள்ளத்தக்க மீட்பருமானார். ஆதாமின் பாவத்தின் காரணமாக, அவனும், அவன் சந்ததியும், ஏதேன் தோட்டத்திலுள்ள விருட்சங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு, விலக்கப்பட்டு, தொடர்ந்து ஜீவிக்க முடியாதவர்களாயிருந்தனர். (ஆதி. 3:22-24); ஆயினும், இப்போது மனுக்குலத்தார் ஜீவ அப்பமும்,

பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்ட ஈவுமாகிய இயேசுவைப் பெற்றிருக்கின்றனர். அதை ஏற்றுக் கொள்பவர்கள் இழந்துபோன ஜீவனையும், ஆசீர்வாதங்களையும் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள்.



ஜீவ அப்பம் நானே

## ஜீவ அப்பம்

நம்முடைய பாடத்தில் இயேசு தம்மையே, "**வானத்திலிருந்திறங்கிய ஜீவ அப்பம்**" என்று குறிப்பிடுகிறார். மரணத்திலிருந்து மரித்துக் கொண்டிருக்கும் மனுக்குலத்தாரை இரட்சிக்கும் போஜனமாக அவர் வந்தார். அவர் தம்முடைய பூரண மனுஷீகத்தில் தமது ஜீவனுக்குரிய உரிமை மற்றும் தமது ஜீவாதர உரிமைகளையும் மெய்யான போஜனமாக கொடுப்பதன் மூலம் மனுக்குலம் என்றென்றுமுள்ள ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி தம்மையே கொடுத்தார், அவர் வானத்திலிருந்து இறங்கி வந்தவராக இராமல் ஒரு மனித தகப்பனை உடையவராக இருந்திருந்தால், (ஒரு மானிட ஆணுடைய வித்திற்கு பதிலாக, கன்னியின் வயிற்றில் கருவாக உண்டாக்கும் வித்தாகும்படி மனிதனாவதற்கு முந்தின ஜீவிய நிலைமையில் அவர் இல்லாதிருந்தால்) அவர் ஜீவ அப்பமாக மாறியிருக்க முடியாது; ஏனெனில் ஒரு மனுஷீக தகப்பனைக் கொண்டிருந்தால் அவர் தாமே தமக்கு ஜீவ அப்பம் தேவைப்படுகிறவராக இருந்திருப்பார்; ஆதலின் அவர் அதனை மற்றவர்களுக்கு அருளக் கூடியவராக இருக்க முடியாது. மெய்யாகவே அவர் ஜீவ அப்பமாக இருந்தார். "**வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே: இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்.**" (யோவா. 6:58).

இயேசு இந்த ஜீவ அப்பமாக இருந்த போதிலும், ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்ட நம்முடைய மனுக்குலத்தாரில் எவரும் அவருடைய புண்ணியத்தில் பங்கடைவதற்கு முன்பாக, அவர் நமக்காக நொறுக்கப்படவும்,பலியாக மரிக்கவும் வேண்டியதாயிருந்தது. அவர் பூரண மனுஷனாக இருந்தபடியால் ஆதாமும் அவன் அரையில் இருந்த மனுக்குலமும் பாவம் செய்த போது, அவர்கள் மீது விதிக்கப்பட்ட மரண சாபத்தை நீக்கிப் போட அவர் தம்மையே ஆதாமுக்கான சரிநிகரான விலைக்கிரயமாகக் கொடுத்தார். இப்போது ஆதாம் மூலமாக ஒவ்வொருவரும் சீர்கெட்டுப் போய் அழிந்து போகின்றனர்; அவன் பிதாவினால் இழுத்துக் கொள்ளப்படும் போது (யோவா. 6:44) இயேசு நமது சார்பாக தம்முடைய பலியின் மூலம் நமக்காக சம்பாதித்த அந்த பூரணங்கள் மற்றும் உரிமைகளைப் புசிக்க வருகிறான். நாம் விசுவாசத்தின் மூலமாக இயேசுவின் சரீரத்தை புசிக்கிறோம் அல்லது உரித்தாக்கிக் கொள்கிறோம் அதாவது விசுவாசத்தின் மூலமாக அவர் நம்முடைய மீட்கும் பொருள்/ஈடுபலி என்று நாம் உணர்வதுடன், விசுவாசத்தின் மூலமாக ஒரு பூரண மனிதனாக அவர் பெற்றிருந்ததும், நமக்காக பிட்கப்பட்டதும் அல்லது பலியாக கொடுத்ததுமான அந்த புண்ணியங்களை நமக்கென்று உரித்தாக்கிக் கொள்ளுகிறோம்.

அந்த பலியே நம் எல்லாருக்கும் போதுமானதாய் இருக்கிற போதிலும், ஒருவன் இயேசுவை தனக்கு ஜீவன் அளிப்பவராக ஒப்புக்கொண்டும் ஏற்றுக் கொண்டும் அந்த ஜீவ அப்பத்தில் பங்கு பெறாத வரையில் அவன் அதன் மூலமாக ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியாது என்கிற தேவனுடைய ஏற்பாட்டின் அழகை நாம் பாராட்டுகிறோம். ஜீவனுக்கு அத்தியாவசியமான ஈடுபலியை ஒப்புக்கொள்வது சுவிசேஷ யுகத்தின் போது மட்டும் என்று இல்லாமல், இந்த காரியம், வந்து கொண்டிருக்கிற ஆயிர வருட யுகத்தின் போதும் கூட உண்மையாயிருப்பதாக காணப்படுகிறது. சதாகாலமும் இது உண்மையாயிருக்கும், "**...நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தை பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை.**" இவ்வாறாக கொடுக்கப்பட்ட ஈடுபலி எல்லா ஆசீர்வாதங்களுக்கும் அஸ்திபாரமாய் இருக்கிறது என்பது எக்காலத்திலும் உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். "**தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கிப் போட்டவரும், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிறவருமாகிய தேவ ஆட்டுக்குட்டியின்**" பிட்கப்பட்ட சரீரம் மற்றும் சிந்தப்பட்ட இரத்தத்தினாலன்றி ஒருவனும் பிதாவிடம் வரமுடியாது, அவருடன் ஒப்புரவாகவும் முடியாது. (யோவா. 1:29; எபி. 9:26).

*"ஆகையால், ஒரே மனுஷனுடைய மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல; ஒரே மனுஷனுடைய நீதியான செயலினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று."*
*ரோமர் 5:18*

## ஆதாமிய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து கிடைக்கும் இரட்சிப்பு நிபந்தனையற்றது

யோவான் 6:53-ன்படி, ஜீவன் என்பது இயேசுவின் மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவதை சார்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிற அதே சமயத்தில் ரோமர் 5:18 போன்ற பிற வசனங்கள், இயேசுவின் நீதியின் மூலமாக கிருபையின் ஈவு, "**எல்லா மனுஷருக்கும்**" கிடைக்கிறது என்பதாகச் சுட்டிக் காட்டுகிறதே, இது எப்படி என்று சிலர் ஆச்சரியப்படலாம். நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனமும் உண்மையாகவே அந்த பகுதி முழுவதும் (யோவா. 6:27-58), நித்திய ஜீவனைக்குறித்தும், அதை எவ்வாறு அடைந்து கொள்ளலாம் என்பதைக் குறித்தும் கூறுகிற அதே வேளையில் ரோம. 5:18 எல்லா மனுஷரிடமிருந்தும், ஆதாமின் ஆக்கினைத் தீர்ப்பாகிய மரணம் நீக்கப்படுவதைக் குறித்தும் சொல்கிறது

என்பதை – நாம் மனதில் வைத்துக் கொண்டால், இந்த விஷயம் தெளிவாகப் புரியும். தேவனுடைய கிருபையினால் கிறிஸ்து, "**ஒவ்வொருவருக்காகவும்**" மரணத்தை ருசிபார்த்தார் (எபி. 2:9); ஆகையால் ஒவ்வொரு மனுஷனும் தனது சார்பாக இயேசுவின் மரணத்தினால் ஏற்படும் பலனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆதாமின் மரணமாகிய சாபத்திலிருந்து எல்லாருக்கும் இரட்சிப்பு கிடைக்கும், ஏனெனில் தேவன், "**எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்**" (2 தீமோ. 2:4), ஆனால் உலகளாவிய எல்லாரும் நித்திய ஜீவனை அடைவார்கள் என்னும் இரட்சிப்பு முறை கிடையாது என்பதைக் குறித்து வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன, ஏனெனில், "**நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை.**" அநேகர் இதனைச் செய்ய மாட்டார்கள். அதனால், "**இரண்டாம் மரணத்தில்**" அழிந்து போவார்கள்.

ரோமர் 5:16-ல் சொல்லப்பட்டுள்ள "**கிருபை வரம்**" ஆதாமுக்கும், அவன் சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பொதுவானதாயிருக்கிறது, ஏனெனில் இது "**எல்லா மனுஷருக்கும்**" கிடைக்கக் கூடியதாயிருக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் மூலமாக கிடைக்கிற இந்த "**கிருபை வரம்**" குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி அல்லாமல் எவருக்கும் நித்திய ஜீவனை உத்திரவாதம் அளிக்கவில்லை. ஏனெனில் எல்லா மனுஷருக்காகவும், கிறிஸ்துவின் தியாக பலியின் புண்ணியம் பிரயோகித்தல் வருகிறபடியால், உலகத்தாரை மரணத்திலிருந்து விழித்தெழச் செய்து, பூரண ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதலை அடைந்து கொள்ளும் ஒரு சந்தர்ப்பத்தை எல்லாருக்கும் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கும். எனவே ரோமர் 5:16-ல் சொல்லப்பட்டுள்ள "**கிருபை வரம்**" என்பதை "**ஜீவனை அளிக்கும் நீதிமானாக்கப் படுதலுடன்**" அடையாளப்படுத்தக் கூடாது, அது "**ஜீவ அப்பத்தைப்**" புசிப்பதைச் சார்ந்திருக்கிறது.


எல்லாரும் பாவஞ்செய்தார்கள்
என்ற ரோமர் 5:12-ன் அர்த்தம்
எல்லாரும் பாவஞ்செய்தார்கள் என்பதாகும்.

அடுத்த வசனம் (வசனம் 19) கிருபை வரம், மீட்கும் பொருள் புண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்றும், அது ஆதாமின் பாவத்தையும், ஆக்கினைத் தீர்ப்பையும் ரத்து செய்யும் பலனை ஏற்படுத்துகிறது என்பதையும் நிரூபிக்கிறது. எப்படியெனில் எல்லா மனுஷருக்கும் இந்த கிருபை வரம் கிடைப்பதற்கான காரணத்தை இது கொடுக்கிறது: "**ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினால்** (அந்த) **அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல** (ஆதாமின் பாவத்தில் பங்கடைந்தவர்கள்), **ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே** (அந்த) **அநேகர் நீதிமான்–களாக்கப்படுவார்கள்.** (ஆதாமின் பாவம் மன்னிக்கப் பட்டிருக்கும்)."

## ஜீவனுக்கேதுவான இரட்சிப்பு நிபந்தனைக்குட்பட்டது

ஆதாமின் மரண ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து எல்லாருக்கும் இரட்சிப்பு இருக்கிறது என்றும், அது நிபந்தனையற்றது, விசுவாசத்தை பயிற்சி செய்வதைச் சார்ந்தது அல்ல என்றும் அநேக வேத பகுதிகள் தெரியப்படுத்துகிற அதே வேளையில், மற்ற வேத பகுதிகள் நித்திய ஜீவனுக்கான இரட்சிப்பைப் பற்றிக் கூறுவதுடன், அந்த இரட்சிப்பு விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் பயிற்சி செய்வதைச் சார்ந்திருக்கிறது என்றும் கூறுகிறது. உதாரணமாக யோவா. 3:15,16. இயேசுவின் மீட்கும் பொருள் புண்ணியம் ஆதாமின் மரண ஆக்கினைத் தீர்ப்பை நீக்கிப் போடுவதுடன் (அழிந்து போகாமல்) விசுவாசத்தின் மூலமாக (அவரை விசுவாசிப்பவன் எவனுக்கும்") நித்திய ஜீவனுக்கு ஏதுவான இரட்சிப்பை ("நித்திய ஜீவன்") அடைந்து கொள்ளும் அந்த வாய்ப்பைக் கொடுக்கிறது என்பதைத் தெரிவிக்கிறது. குமாரன் மீது விசுவாசம் வைப்பவர்கள் மட்டுமே நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள்; "**குமாரனை விசுவாசியாதவன் ஜீவனைக்** (நித்திய ஜீவன்) **காண்பதில்லை**" (வசனம் 36). அப். 3:23 உலக மனுக்குலத்தாருக்கான நித்திய ஜீவன் கீழ்ப்படிதலைச் சார்ந்திருக்கிறது என்று தெரிவிக்கிறது.

சபை மட்டுமல்ல, உலகத்தாரும் கூட, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், அவர்கள் ஜீவ அப்பத்தைக் கண்டிப்பாக புசிக்க வேண்டும். யோவான் 6:27-58, மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நம்முடைய கர்த்தரின் பூரண மனுஷீகம், நமக்காகப் பிட்கப்பட்ட அப்பமாக சபை மற்றும் உலகத்தின் ஆதாமிய பாவங்களை ரத்து செய்வதற்கு மிகவும் பலனுள்ளதாயிருக்கிறது மட்டுமல்லாமல், அவர் ஒப்புக் கொடுத்ததை, அதாவது அவருடைய மனுஷீகம் மற்றும் அவருடைய ஜீவனுக்கான உரிமை மற்றும் ஜீவாதார உரிமைகள் ஆகியவற்றை உரித்தாக்கிக் கொள்பவனுக்கு நித்திய ஜீவனையும் அருளுகிறது என்பதைக் காட்டுகிறது. இந்த வசனங்களில் அவருடைய மாம்சம் அவருடைய மனுஷீகத்தையும், அவருடைய இரத்தம் ஜீவனுக்கான அவருடைய மனுஷீக உரிமையையும், மனுஷீக ஜீவாதார உரிமைகளையும் குறித்துக் காட்டுகிறது. வசனம் 27-ல் "**இயேசு, அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள். அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்**" என்று நம்மிடம் கூறுகிறார். போஜனம் என்று

இங்கே சொல்லப்படுவது அவருடைய மாம்சமாயிருக்கிறது. வசனம் 33-ல் அவர், தம்முடைய மனுஷீகமே உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பம் என்று தெரிவிக்கிறார். அவருடைய மனுஷீகம், ஒருவரால் உரித்தாக்கிக் கொள்ளப்படுமானால், அது அவனை மரியாமலிருக்கும்படி செய்வதுடன், மரணத் தீர்ப்பிலிருந்து விடுதலையாக்கி, ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து அவனை விடுவித்துக் காக்கிறது என்று வசனம் 50 தெளிவுபடுத்துகிறது. வசனம் 51, அவருடைய மனுஷீகமே உலகத்தின் ஜீவனுக்காக அவர் கொடுக்கப்போகிறதாயிருக்கிறது, அதாவது அதை உரித்தாக்கிக் ("புசிப்பது") கொள்கிறவன் மீது நித்திய ஜீவனை அருளுவதற்காக அவர் கொடுக்கிறதாயிருக்கிறது என்று காட்டுகிறது.

## கர்த்தருடைய இராப்போஜனம்

இதே கருத்து தான் கர்த்தருடைய இராப்போஜனத்தில் போதிக்கப்படுகிறது. நாம் அப்பத்தைப் புசிப்பது, நாம் மன்னிப்பை உரித்தாக்கிக் கொள்வதை மட்டும் குறித்துக் காட்டாமல், அவர் இருந்தபடியே - ஒரு பூரண மனுஷ ஜீவியை, ஜீவனுக்கான அவரது உரிமை மற்றும் அவருடைய ஜீவாதார உரிமைகளையும் கூட நாம் உரித்தாக்கிக் கொள்கிறோம். "**இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது.**" (குறித்துக் காட்டுகிறது). இவ்வாறாக நாம் தேவனுக்கு முன்பாக விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்பட்டு, இயேசுவின் மீட்கும் பொருள் பலி புண்ணியத்தை உரித்தாக்கிக் கொள்கிறோம். - நாம் உண்மையாகவே நீதிமானாக்கப்படவோ அல்லது பூரண மனித ஜீவிகளாக்கப்படவோ இல்லை. ஆனால் இயேசுவின் புண்ணியம் நமக்கு சாட்டப்படுவதன் மூலமாக நாம் பூரணமானவர்களாக எண்ணப்படுகிறோம். நம்முடைய நீதிமானாக்கப்படுதலில் **(1)** தேவன் நம்மை மன்னிக்கிறார் **(2)** கிறிஸ்துவின் நீதி நம்முடைய நீதியாக நமக்குச் சாட்டப்படுகிறது. (ரோம. 3:21,22; 10:4; 1 கொரி. 1:31; 2 கொரி. 5:21; கலா. 2:16; 3:22; பிலி. 3:9). இயேசுவின் புண்ணியம் ஆக்கினைத் தீர்ப்பை ரத்து செய்வது மட்டுமல்லாமல், அதோடுகூட, பூரண மனுஷீகத்தையும் - அதற்குரிய உரிமைகளையும் சாட்டுதல் செய்யப்படுதலாக சபைக்கும், உண்மையாகவே உலகத்தாருக்கும் கொடுக்கிறது.

E.Vol.6, பக்கம் 690 மற்றும் PT 49, பக்கம் 39, பத்தி -2-லிருந்து நாம் கற்றுக் கொள்வது என்னவெனில் மத். 26:28 மற்றும் மாற். 14:24 ஆகிய வசனங்களிலுள்ள வார்த்தைகள் காட்டுகிறபடி, இது நமக்கு விசுவாசத்தினால் நீதிமானாகுதலின் சித்திரத்தை நமக்குத் தருகிறது. புது உடன்படிக்கை, ஆயிர வருட யுகம் மற்றும் அதன் முடிவில் கொஞ்ச காலப்பகுதியிலும் உண்மையாகவே உலகத்தாருக்குக் கொடுக்கப்போகிற ஆசீர்வாதங்களெல்லாம் சபைக்கு கொடுக்கப்பட்டதாக எண்ணப்படுவதை நமக்கு அடையாளமாக தருகிறது. இந்த இரண்டு வசனங்களிலும் இயேசு புது உடன்படிக்கைக்குரிய தம்முடைய இரத்தத்தை அடையாளப்படுத்துவதற்கு திராட்சை ரசத்தை சுட்டிக் காட்டுகிறார். புது உடன்படிக்கையின் இரத்தம் நம்மீது உண்மையாகவே தெளிக்கப்பட்டிருந்திருக்குமானால், நம்முடைய நீதிமானாக்கப்படுதல் எண்ணப்பட்டதாக அல்லாமல் உண்மையானதாயிருக்கும். ஆனால் நம்முடைய நீதிமானாக்கப்படுதல் எண்ணப்பட்டதாயிருக்குமானால், புது உடன்படிக்கை நீங்கலாக இயேசுவின் இரத்தம் மட்டுமே நம்மீது தெளிக்கப்பட்டதாக எண்ணப்படுகிறது. (1 பேது. 1:2; ரோம. 3:24-28; பிலி. 3:9).

1 கொரி. 10:16,17-ல் அப்பமானது சபையாரின் மனுஷீகத்தையும், பாத்திரம் கர்த்தருடன்கூட அவருடைய மீட்கும் பொருள் கிரயத்தில் அல்ல, (கீழ்ப்படியாமையின் மூலமாக தன்னுடைய ஜீவனை இழந்த பூரண மனுஷனாகிய ஆதாமுக்கான அவருடைய சரிநிகரான விலைக்கிரயத்தில் அல்ல ஆனால்) அவருடைய பாவநிவாரண பலியின் பாகமாக சபையின் மரணத்தையும் குறித்துக் காட்டுகிறது என்று அப்போஸ்தலன் விவரிக்கிறார்.

நாம் ஞாபகார்த்த காலத்தையும், அதோடுகூட அதிகமாக எதிர்பார்க்கும் மிகப்பெரிய ஆசீர்வாதங்களையும் நெருங்குகிறபடியால், அக்கினிமயமான சோதனைகளையும் எதிர்பார்க்க வேண்டும் என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்! "**பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்... அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்**" (1 பேது. 4:12,13). இது பாவநிவாரண பலியில் பங்கடைகிற சிறுமந்தையினரின் பாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றது; ஆனால் தாற்பரியத்தின் அடிப்படையில், இது கிறிஸ்துவினிமித்தம் பாடநுபவிக்கிற தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்கள் எல்லாருக்கும் பொருந்துகிறது.

சொல்லர்த்தமாக மொழிபெயர்க்கும் போது, இந்த வசனத்தின் முதல் பகுதியானது "**பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி, உங்கள் மத்தியில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து திகையாதிருங்கள்**" என்று வாசிக்கப்படும். இந்த புத்திமதி நம்முடைய எண்ணங்களை மல்கியா தீர்க்கதரிசி மூலமாகக் கொடுக்கப்பட்ட தேவனுடைய வாக்கியத்துக்கு மீண்டுமாக இழுத்துக் கொள்கிறது. அதில் உடன்படிக்கையின் தூதனானவர் தீவிரமாய் வருவார்- அவருடைய வருகையே பல நூற்றாண்டுகளாக எதிர்பார்க்கப்பட்டு வருகிறது என்று அவர் அறிவிக்கிறார் மேலும் அவருடைய வருகையில் அவர் வரும் நாளை சகிப்பவன் யார்? அவர் வெளிப்படும் போது நிலை நிற்பவன் யார்? என்பது ஒரு ஆணித்தரமான கேள்வி: அவர் உட்கார்ந்து அடையாளமான பொன், வெள்ளி ஆகியவற்றைப் புடமிட்டு சுத்திகரிக்கிறவராக இருப்பார். (மல். 3:1-3).




நாம் இந்த தீர்க்கதரிசனத்தை முதலாவதாக, நம்முடைய கர்த்தருடைய முதலாம் வருகையின் காலப் பகுதியுடன் பொருத்திப் பார்க்கிறோம். முன்னறிவிக்கப் பட்டபடியே, அவர் அப்போது வந்து, ஒரு பொருத்தமான வேலையைச் செய்தார். அதன்பின்பு சுவிசேஷயுகம் முழுவதுமான இடைக் காலத்தில் அவருடைய வேலை – தம்முடைய ஜனங்களைப் புடமிடுவதும், சுத்திகரிப்பதுமாக இருந்தது என்று நாம் நம்புகிறோம். இந்த தீர்க்கதரிசனம் சுவிசேஷ யுகத்தின் முடிவில் பரோஷியா காலப்பகுதி மற்றும் எபிபெனி அல்லது அப்போகாலிப்ஸ் காலப்பகுதி ஆகிய இரண்டு காலப்பகுதியிலும்கூட விசேஷமான பொருத்தத்தைக் கொண்டிருக்கிறது. (E.Vol.5, அத்தியாயம் 6).

நம்முடைய பாடத்தில் அப்போஸ்தலன் பேதுரு, “**இது பிரதிஷ்டை செய்தவர்கள் எல்லாருமே பங்கடைகிற அக்கினி–மயமான பரீட்சையாக இருக்கிறது**” என்று சொல்வதாகத் தெரிகிறது. நமக்கு நேரிடும் அக்கினிமயமான சோதனைகள் யாவும் கட்டாயமாக நம் மத்தியில்தான் ஏற்படும் என்று அவர் அர்த்தப்படுத்தவில்லை, ஆனால் சுவிசேஷயுகம் முழுவதும் உண்மையாகவே பிரதிஷ்டை செய்தவர்களுடைய மொத்த அனுபவங்களும், அக்கினிமயமாகத்தானிருக்கும். நமக்கான மிகக் கடுமையான பரீட்சைகள் நம்முடைய கிறிஸ்தவ சகோதரர்களிடமிருந்தே வரும் என்பதையும்கூட அவருடைய வார்த்தைகள் அர்த்தப்படுத்துகின்றன. நம்முடைய கர்த்தரையும், அவருடைய சகோதரர்களாக, அவருடைய நாளிலிருந்த யூதர்கள் அவரைத் துன்பப் படுத்தியது போலவே இதுவும் இருக்கும்.

பரி.பேதுருவின் எண்ணம் இப்படியிருப்பதாகத் தெரிகிறது: பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவனாகிறவன் யாராயிருந்தாலும், அவனுடைய வழி அதன்பிறகு சுலபமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது, ஏனெனில் அதற்கு மாறாக அவர்கள் ராஜ்யத்துக்கு ஆயத்தப்படுத்தப்படும் படியாக அப்படிப்பட்ட சோதனைகளை அவர்கள் தங்கள் ஓட்டத்தின் முடிவு வரைக்கும் சகிக்க வேண்டும். பிரதிஷ்டை செய்தவர்கள் கடந்து சென்ற அக்கினிமயமான பரீட்சைகள் சில சமயங்களில் மற்றவர்களுக்கு இருந்ததைவிட அதிகக் கடுமையாக இருந்து வந்திருக்கின்றன என்பது உண்மைதான். தேவனுடைய வார்த்தை சுட்டிக்காட்டுகிறபடி, இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில், ஒவ்வொரு பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவனுடைய விசுவாசத்தையும் பரீட்சிக்கிற விசேஷமான பரீட்சைகள் இருக்கும் என்றும், இந்த விசேஷமான சோதனைகள், யாரெல்லாம் தங்கள் விசுவாசத்தை பொன், வெள்ளி தேவனுடைய வார்த்தை மற்றும் குணாதிசய சாயல் என்னும் விலையேறப்பெற்ற கற்கள் கொண்டு கட்டியிருக்கிறவர்கள் என்றும், யாரெல்லாம் மரம், புல், வைக்கோல் போன்ற மனுஷ பாரம்பரியங்கள் மற்றும், “**பிசாசுகளின் உபதேசங்களைக்**” கொண்டு (1 கொரி. 3:12; 1 தீமோ. 4:1) கட்டியிருக்கிறார்கள் என்றும் வெளிப்படுத்திக் காட்டும் நோக்கத்திற்காகவே அனுமதிக்கப்படும் என்பதுகூட உண்மைதான். “**கர்த்தருடைய நாளின்**” அந்த “**அக்கினியில்**” முந்தின வகுப்பாரின் வேலை பாதுகாக்கப்படும், ஆனால் பிந்தின வகுப்பாருடையது அழிக்கப்படும். (1 கொரி. 3:13–15). குறிப்பாக இது இப்பொழுது நம்மீது வந்திருக்கிற எபிபெனி அல்லது அப்போகாலிப்ஸ் காலப்பகுதியில் மிகவும் உண்மையாயிருக்கிறது.

ஆயினும், சுவிசேஷயுக முடிவில், வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள், இந்த யுகத்தின் முந்தின நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களைக் காட்டிலும் மிகவும் அதிகமாக குறிப்பிடத்தக்க வகையில் சோதிக்கப்பட்டு வருகிறார்கள் என்று நாம் எண்ண வேண்டாம். எவருமே தாங்குவதற்கு மேலாக சோதிக்கப்படுவதில்லை; ஏனெனில் ஒவ்வொரு சோதனையிலும் தப்பித்துக் கொள்ளும் படியான போக்கை கர்த்தர் ஏற்படுத்துவார். (1 கொரி. 10:13).

தேவன் கடுமையான சோதனைகளையும், பரீட்சைகளையும் எந்த நேரத்திலும் வரும்படி அனுமதிப் பாரானால், தராசின் அடுத்த தட்டில் இன்னொரு பக்கத்தில் உற்சாகப் படுத்துதல் மற்றும் ஆசீர்வாதமான தன்மையான ஏதோ ஒன்றை வைக்கிறார். எனவே பிரதிஷ்டை செய்தவர்கள் இப்பொழுது பெற்றிருக்கிற தேவனுடைய திட்டத்தைப் பற்றிய அறிவு நம்முடைய நாளின் பரீட்சைகளை, நாம் கர்த்தருடைய திட்டங்களை புரிந்து கொள்வது போல முழுவதும் புரிந்து கொள்ளாத மற்றவர்களையும் விட அதிக சுலபமாக தாங்கக் கூடியவர்களாகச் செய்கிறது. சில விஷயங்களில் நம்முடைய சோதனை அவர்களுடையதைக் காட்டிலும் அதிகக் கடுமையாக இருக்கிறது, வேறு காரியங்களில் அது குறைவான கடுமையாகவே இருக்கிறது என்ற உண்மையையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

## மெய்யான கிறிஸ்தவர்கள் துன்பப்படுதலை எதிர்பார்க்க வேண்டும்

அப்போஸ்தலன் 1 பேது. 4:12,13 ஆகிய வசனங்களில் சூழ்நிலைப் பொருத்தமாக, கிறிஸ்தவர்கள் சகித்துக் கொள்ள வேண்டிய பல்வேறு வகையிலான பாடுகளைக்

குறித்து விவரிக்கிறார். உலகத்தின் நோக்கிலிருந்து பார்க்கும் போது – உண்மையாகவே தேவனுடைய ஏற்பாடு பற்றிய அறிவின் நோக்கு நிலையைத் தவிர, பெரும்பாலும் வேறெந்த கண்ணோட்டத்தில் பார்த்தாலும் – கிறிஸ்தவன் துன்பப் படுவதற்காகவே அழைக்கப்படுகிறான் என்பது மிகவும் புதுமையாகத் தெரிகிறது; ஒருவன் பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவனாக மாறிய பின்பு தேவதயவு அவனது எல்லா காரியங்களிலும் நீடித்திருப்பது இயல்பானதாகவே தோன்றும். "**தம்மிடம் பக்தியுடன் இருப்பவர்களை பாடனுபவிக்க அனுமதிக்கும் வகையான தேவனையா நீங்கள் பெற்றிருக் கிறீர்கள்? தேவனுடய சித்தத்தைச் செய்ய ஒருவன் தன்னையே கொடுக்கிற போது, அதற்குப் பிறகு, பரீட்சைகள் மற்றும் துன்பங்களிலிருந்து அவனுக்கு விலக்களிக்கப்படவேண்டும்: நிச்சயமாகவே தேவன் தம்மை உண்மையுடன் தொழுது கொள்பவர்களை, கூடிய மட்டும் ஒன்றுமே அவர்களை பாதிக்காத வகையில், அவர்களை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும்!**" என்று சொல்ல உலகத்தார் முயற்சிக்கிறார்கள்.

கிறிஸ்தவ ஜனங்களில், பிரத்தியேகமாக வளர்ச்சி யடையாதவர்கள், அநேகந்தரம் தங்கள் அனுபவங்களைக் குறித்து திகைப்படைகிறார்கள் – ஆம், வெட்கப்படுகிறார்கள், ஏனெனில் கிறிஸ்தவன் ஏன் பாடுபடவேண்டும் என்பதைக் குறித்து அவர்கள் அறிந்து கொள்வதில்லை. ஆயினும் பேதுரு "**ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்**" என்று கூறுகிறார். (1 பேது. 4:16). மனக்குழப்பம் ஏற்படுத்துகிற இந்தபாடுகள், தேவனுடைய ஏற்பாட்டுக்கு இசைவாக இருக்கிறது; ஏனெனில் தேவன் பிரதிஷ்டை செய்தவர்கள் விஷயத்தில், அவர்களுடைய இருதயத்தின் உத்தமத்தை வெளிப்படுத்துவதற்காக தனிப்பட்ட முறையில் ஈடுபாடு செய்கிறார். தேவனிடத்திலும், நீதியின் கோட் பாடுகளிலும் கொண்டுள்ள இந்த உத்தமம், விசுவாசத் தாலும், கிரியைகளினாலுமே மெய்ப்பித்துக் காட்டப் படவேண்டும். அது தற்கால ஒழுங்கு முறைகளுக்கு ஒத்திசைவில்லாததும், உலகின் கண்ணோட்டங்களுக்கும் ஒத்திசைவு இல்லாததாகவே இருக்கும்.

நெடுங்காலத்துக்கு முன்பே, தேவன் பாவத்தைத் தடுக்க வேண்டும் என்று விரும்பியிருந்தால், அதைத் தடுத்திருக்கமுடியும் என்று தேவனுடைய ஜனங்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர் இதைச் செய்யாத படியால், உலகத்தின் தற்போதய நிலைமைகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்கிறார் என்பது தெளி வாகிறது. இங்குள்ள யாவும், நீதிக்கு அனுகூலமா யிருந்திருக்குமானால், தேவனுக்கு உத்தமமாயிருத்தல் மிகவும் சுலபமான காரியமாயிருந்திருக்கும். தேவனுடைய ஜனங்களாயிருப்பவர்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததையே பெற்றுக் கொண்டால், நித்திய ஜீவனுக்கான வழி சுலபமானதும், பொது ஜனங்களால் விரும்பப் பட்டதாகவும் இருந்திருக்கும்.




ஆயினும் தேவன் தம்முடைய வார்த்தையில், கிறிஸ்தவர்கள் என்ற வகையில் தம்முடைய ஜனங்களுக்கு சகலமும், மாம்சத்தின் படியல்லாமல் ஆவியின்படி, நன்மைக்கேதுவாக நடக்கிறது என்று விளக்கி கூறுகிறார். (ரோம. 8:28). மகா கொடிய பேரழிவாகக் காணப் படுவதையுங்கூட அவரிடத்தில் உச்ச உயர் அளவில் அன்பு கூருகிறவர்களுக்கு நன்மைக்கேதுவாக நடக்கும் படிக்கு அவர் மாற்றியமைக்க முடியும், மாற்றி அமைப்பார். ஆகவே தேவனுடைய திட்டத்தை சரியாகப் பார்க்கிறவர்கள் மட்டுமே, ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவினிமித்தம் சகிக்கிற பாடுகள், அவமானம், துன்பப்படுதல் ஆகியவை குறித்து வெட்கப்பட எந்த காரணமும் இல்லை என்கிற இந்த எண்ணத்திற்குள் பிரவேசிக்க முடியும். பாடனுபவிப்பதன் நோக்கத்தைப் பார்க்கக்கூடியவர்கள் மட்டுமே இதன் பொருட்டு தேவனை மகிமைப்படுத்த முடியும். அவர்கள் எதிர்க்கப்படும் போதும், தவறாக எடுத்துக் காட்டப்படும் போதும், அவதூறு பேசப்படும் போதும் அவரை மகிமைப்படுத்த முடியும்.

தேவனுடைய ஜனங்களுக்கு இந்த பாடுகளின் இயல்புகளும் – உலகத்தாரின் எதிர்ப்பும் – நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மீது வந்த அதே மாதிரியாகத்தான் இருக்கும். தங்களை பரிசுத்தமான ஜனம் என்று அழைத்துக் கொண்ட மனுஷரால், அவர் அசட்டை பண்ணப்பட்டும் புறக்கணிக்கப்பட்டுமிருந்தார். சுவிசேஷ யுகம் முழுவதும் அது அப்படியே இருந்து வந்திருக்கிறது. தங்களை பரிசுத்தமான ஜனங்கள் என்று அழைத்துக் கொண்டவர்கள்,தேவன் தம்முடைய பரிசுத்தவான்கள் என்றும், மெய்யாகவே தம்முடைய உண்மையான பரிசுத்தமான ஜனம் என்றும் அங்கீகரித்துக் கொண்டவர் களை அசட்டை பண்ணி புறக்கணித்து விட்டனர். நாம் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; ஆனால் நம்முடைய கர்த்தர் நம்மை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினால், உலகம் நம்மைப் பகைக்கிறது. (யோவா. 15:18-25).

ஒவ்வொரு கிறிஸ்தவனும், கர்த்தருடைய சித்தத்தை கற்று அறிந்து கொள்வதும், அவனைச் சுற்றியுள்ள நிலைமைகளை கவனமாக கருத்தில் கொள்வதும் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் படியாக மட்டுமல்லாமல் கூடுமானமட்டும் மற்றவர்களுக்கு அசௌகரியங்களோ, உபத்திரவங்களோ ஏற்பட காரணமாக

இராமல், வாழ்க்கையில் மிதமான ஒரு போக்கைப் பின்பற்ற நாடுகிறவனாக இருக்க வேண்டும். அவன் இதைத் தன்னால் முடிந்த அளவுக்கு சிறப்பாகச் செய்திருக்கும் போது, கர்த்தருடைய ஞானமுள்ள மேற்பார்வை மற்றும் பரிபாலனத்தின் மீது சார்ந்தவனாக உறுதியான நம்பிக்கையுடன் அவன் முன்னோக்கிச் செல்ல வேண்டும்; ஏனெனில் தேவன் நிச்சயமாகவே தம்மீது நம்பிக்கை வைக்கிறவர்களையெல்லாம் பாதுகாக்கிறார்.

அக்கினிமயமான சோதனை மிகவும் கடுமையாக இருக்கிற சமயத்தில், கர்த்தருடைய கவனம் நம்மீது இருக்கிறது என்பதில் நாம் நிச்சயமாயிருக்கலாம். எனவே கிறிஸ்துவினிமித்தம் பாடனுபவிப்பதற்கு நாம் சிலாக்கியம் பெற்றிருப்பதால் நாம் களிகூரலாம். சபையின் மகாபெரிய தலையானவரும், சரீர அங்கத்தினர்களும், வரப்போகிற மகிமைக்கு தங்களை ஆயத்தப்படுத்த அப்படிப்பட்ட பாடுகளின் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள். மேலும் மீதமுள்ள பிரதிஷ்டை செய்தவர்களும், ராஜ்யத்தில் ஒரு பங்கைப் பெறுவதற்கு பாடனுபவிப்பது அவசியம் என்பதிலும் நாம் நிச்சயமாயிருக்கலாம். பாடுகள் எந்த வகையில் வந்தாலும் – அது நம்முடைய சொந்த மாம்சம் அல்லது மற்றவர்களிடமிருந்து வருவதாக இருந்தாலும் – கர்த்தருக்கு ஊழியம் செய்யும் நம்முடைய முயற்சிகளின் பலனாக ஏற்படுமானால், அது கிறிஸ்துவினிமித்தமான பாடுகள் என்பதில் நாம் உறுதியாயிருக்கலாம். ஆகவே, நம்முடைய ஓட்டத்தின் முடிவு வரைக்கும் நாம் உண்மையுடன் நிலைத்திருந்தால் – இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் – தேவன் மற்றும் கிறிஸ்துவின் மகிமையான ராஜ்யத்தில், தேவனுடைய புத்திரர்கள் வெளிப்படும் போது, நாம் நம்முடைய வெகுமதியைப் பெற்றுக் கொள்வோம். (ரோம. 8:17; கொலோ. 3:4).

அருமை சகோதரர்களே, மேலே கர்த்தருடைய இராப்போஜனத்துடன் தொடர்புள்ள எண்ணற்ற கருத்துக்கள் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாம் ஞாபகார்த்த பஸ்காவுக்கு ஆயத்தமாவதற்கு அவைகள் நமக்கு உதவியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

## கர்த்தருடைய பஸ்காவுக்காக ஆயத்தப்படுதல்

கர்த்தருடைய இராப்போஜனத்துக்கு நாம் ஆயத்தப் படுவதைக் குறித்துப் பேசும்போது, அதனுடன் தொடர்புள்ள பல்வேறான விஷயங்களை நமது நினைவுக்கு கொண்டு வருகிறது: **(1)** தற்பரிசோதனை, **(2)** சுத்திகரிப்பு மற்றும் **(3)** ஆவியினால் நிறைந்திருத்தல். PT 1920, பக்கம் 190–ல் தற்பரிசோதனை செய்வது பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அவைகள் ஞாபகார்த்தத்துக்கு நாம் ஆயத்தப்படுவதற்கு மிகவும் உதவியாயிருக்கும். ஆகவே அந்த கட்டுரையைப் படித்து அதில் சொல்லப்பட்டுள்ள ஆலோசனைகளை ஞாபகார்த்தத்திற்கு ஆயத்தப்படுவதற்காக நாம் பயன்படுத்திக் கொள்ள பரிந்துரைக்கிறோம்.

இஸ்ரயேலர்கள் தங்களுடைய வீடுகளில் புளிப்பு இருக்கிறதா என்று தேடிப் பார்த்தலுக்கு நிறைவேறுத லான – நம்முடைய தற்பரிசோதனை உண்மையாக நடத்தப்பட்டால், அதன் பலன், நம்முடைய இருதயங்கள் மற்றும் மனங்களில் உள்ள அடையாளமான புளிப்பாகிய பாவம், தப்பறை, தன்னலம் மற்றும் உலகத்தனம் ஆகியவற்றை, பிரத்தியேகமாக நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிற குற்றங்களை (எபி. 12:1) நாம் கண்டு பிடிப்பதில் முடியும். தேவனுடைய ஆவியால் நாம் இவைகளை நம்மைவிட்டு சுத்திகரித்து அவற்றை அழித்துப் போடுவோமாக. (ரோம. 8:12,13; 1 கொரி. 5:7,8). ஞாபகார்த்த பஸ்காவை தகுதியாக ஆசரிக்க நாம் ஆயத்தப்படுவதற்கு இது இரண்டாவது காரியமாக இருக்கும்.

ஞாபகார்த்த விருந்தை தகுதியான முறையில் ஆசரிப்பதற்கு நாம் ஆயத்தப்படுவதற்கான மூன்றாவது காரியம் ஆவியினால் நிறைந்திருத்தல். நம்முடைய இருதயங்கள் மற்றும் மனங்களில் கர்த்தருடைய ஆவியினால் முக்கியமாக விசுவாசம், நம்பிக்கை, இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் மற்றும் அன்பு ஆகிய ஆவியினால் நிறைந்திருத்தல் ஆகும். அன்பு சகோதரரே, நம்முடைய இருதயங்கள் மற்றும் மனங்களை இப்படிப்பட்டவைகளால் நிரப்புவோமாக. இவைகளைத் தேடி உருவாக்குவதில் நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் தீவிரமாய் இருப்போமாக. அவைகளைத் தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் நாம் பெற்றுக் கொள்ளவும், நம்முடைய இருதயங்கள் மற்றும் மனங்கள் முழுவதையும் சகலவிதமான நல்வார்த்தை மற்றும் செயல்களால் நிறையச் செய்ய முயற்சி செய்வோமாக. இவைகள், கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் நாம்வீணரும் கனியற்றவர்களுமாயிராதபடி நம்மைக் காத்துக் கொள்ளும். மேலும் இவைகள் நம்மில் உண்டாயிருந்து பெருகினால், நாம் அடையாளமான விருந்தை உண்மை, சத்தியமெனும் புளிப்பில்லா அப்பத்துடன் ஆசரிக்க உதவியாக இருப்பது மட்டுமல்லாமல், அந்த ஞாபகார்த்தத்தில் உண்மை சத்தியமெனும் புளிப்பில்லா அப்பத்துடன் நாம் உண்மையுள்ளவர்களாக விருந்தை ஆசரிக்கக் கூடியவர்களாக்கும். அதனால் ஞாபகார்த்தத்தில் – நமது நீதிமானாகுதல் மற்றும் பிரதிஷ்டையையும் நம்முடைய கர்த்தர் மற்றும் உண்மையுள்ள எல்லாருடனும் இராஜ்யத்தில் பங்கடைய தகுதியுள்ள நிலையை அடையும்வரை எல்லா கனிகளாலும் நிறைந்ததாக இருக்கும். (2 பேது. 1:5–11).

ஞாபகார்த்த விருந்துக்கு ஆயத்தமாவதற்கு, மேலும் ஒரு வழிமுறையை நாங்கள் ஆலோசனையாகத் தருகிறோம். நமக்கு அன்பானவர்கள் P.Vol.6, அத்தியாயம் 11–ல் "புதுசிருஷ்டியின் பஸ்காவையும்,"

R 5640-5643 வரையுள்ள கட்டுரையையும் வாசிக்கலாம். கர்த்தர் தாமே நம்முடைய பஸ்கா பங்கு கொள்ளுதலை ஆசீர்வதிப்பாராக. ஞாபகார்த்த அறிக்கைகளை வகுப்பு வாரியாக பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கை வகுப்புகளும் – தனிப்பட்டவர்கள் தனியாக ஆசரித்த விவரங்களையும் எங்களுக்கு அனுப்பி வைக்க கேட்டுக் கொள்கிறோம்.

***

**நம்முடைய கர்த்தரின் ஞாபகார்த்தம் 2022**

**புதன்கிழமை ஏப்ரல் 13**

**சாயங்காலம் 6 மணிக்குப் பின்பு**




# பகிர்ந்து கொடுக்க மறவாதிருங்கள்

To communicate forget not

**“நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் பகிர்ந்து கொடுக்கவும் மறவாதிருங்கள்: இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.” (எபி. 13:16).**

நம்முடைய பரமபிதாவானவர் ஒன்றிலும் குறைவில்லாமல், எல்லாவற்றையும் உடையவரான ஐசுவரியவானாக இருக்கிறார். ஆயினும் அவருடைய பூமிக்குரிய சிருஷ்டிகளிடத்தில் அவர் கொண்டுள்ள ஈடுபாடுகளை நாம் நிதானித்துப் பார்ப்போமானால், அவருடைய மகிழ்ச்சி, அவற்றைத் தம்முடைய சிருஷ்டிகளின் நன்மைக்கென்றும், ஆசீர்வாதத்திற்கென்றும் பயன்படுத்துவதில் இருந்து வருவது போல, இப்படிப்பட்ட பெரிய ஐசுவரியங்களை உடமையாகக் கொண்டிருப்பதில் இல்லை என்று அறிந்து கொள்ள முடிகிறது.

*“அவரது பராமரிப்பானது அன்பும் விஸ்தாரமுமானது,*
*மனிதர் மற்றும் மிருக வர்க்கங்கள் அவருடைய திரளான*
*செல்வத்தில் பங்கு கொள்கிறார்கள்;*
*சிருஷ்டிப்பு முழுவதும் அவரது பொறுப்பிலிருக்கிறது*
*ஆனால் பரிசுத்தவான்கள் அவருடைய விசேஷித்த*
*கவனத்தில் இருக்கின்றனர்”*

பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் என்ற வகையில், நம்முடைய வாஞ்சையானது, இரக்கம், உதாரகுணம் மற்றும் அன்பு காட்டுதலில் அதிகமதிகமாக அவரைப் போலாக வேண்டும் என்பதாயிருக்க வேண்டும்; ஆம் அவருடைய குணாம்சத்தை நம்மில் வளர்த்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய பிரகாசிப்பிக்கப்பட்ட ஜனங்களில் சிலர் இந்த உலகப் பொருள்கள் அநேகத்தின் மேல் உக்கிராணப் பொறுப்புக்குரியவர்களாக ஏற்படுத்தப் பட்டு வருகின்றனர். அதன் காரணம் என்னவெனில், சிலர் மாத்திரமே, தங்களிடம் ஒப்படைக்கப்பட்டதை தவறான காரியத்துக்கு பயன்படுத்தாமல், நன்மையான காரியத்துக்கு பயன்படுத்தக் கூடியவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அப்படி அதைப் பெற்றிருப்பவர்கள் இரக்கம் நிறைந்த நம்முடைய பரமபிதாவைப் போல நடப்பவர்களாக, கிடைத்த சிலாக்கியத்தை மிகவும் உயர்வாக மதிக்க வேண்டும்; அதனை வீணாக்கக் கூடாது, சேமித்து பதுக்கி வைக்கவும் கூடாது, ஆனால் எல்லா மனுஷருக்கும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்வதற்கும், ஆசீர்வதிக்கவும் (கலா. 6:10) அதனை ஒரு காரணியாக மட்டும், உயர்வாக மதிக்க வேண்டும். ஓ, அதுவே தேவனுடைய மனப்பான்மையை நம்மில் கொண்டிருப்பது! மேலும் தேவன் நம்முடைய கரங்களுக்குள் கொடுப்பது எதுவாயிருந்தாலும், அதை ஆர்வத்தோடும், ஜாக்கிரதையோடும் பயன்படுத்தப்படவேண்டும், மேலும் கொஞ்ச காரியங்களானாலும் அல்லது அநேக காரியங்களானாலும், அவற்றின்மேல் உண்மையுடன் இருக்க வேண்டும். ஒரே ஒரு டாலர் உள்ள மனிதன் கஞ்சனாகவோ அல்லது கோடி டாலர் உள்ள பெரிய கொடையாளியைப் போலவோ இருக்கலாம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உண்மையான இரக்க குணம், பரந்த மனப்பான்மை, கருணை, அன்பு ஆகியவற்றை நாம் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். “**கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.**” (பிலி. 2:5). அந்த சிந்தை உங்களிடமிருந்து வேறுபடுகிறவர்களுடனும் கூட நீங்கள் மதிப்புணர்வுடனும், கனிவுடனும் அன்பிரக்கத்துடன் நடந்து கொள்ள அது உங்களை வழிநடத்தும். “**கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல**” (ரோம. 8:9) என்பதையும், இதன் தொடர்பாக நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் ஆவி அல்லது சிந்தை என்பது சாந்தமும், அமைதியும் தயாள குணமுமுள்ள ஆவியாயிருக்கிறது. “**அது தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.**” (1 கொரி. 13:4). அதன் கனிகள் சீர்கெட்ட மாம்ச சுபாவத்திற்கு எதிரானதாக, அதாவது அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், சாந்தம் முதலியவையாக இருக்கிறது. “**நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவியின்படி நடக்கவும் கடவோம்**” “**வீண்புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்.**” (கலா. 5:22-26). ஆயினும் பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவின்

ஆவியை வெளிப்படுத்துகிறவர்களாயிருக்க வேண்டும். அப்போது நாம் "**உன்னதமானவருக்குப் பிள்ளைகளா யிருப்போம்: அவர் நன்றியறியாதவர்களுக்கும், துரோகிகளுக்கும், நன்மை செய்கிறாரே. ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்க முள்ளவர்களாயிருங்கள்.**" (லூக். 6:35,36).

பூமிக்குரிய காரியங்களில் அதிக அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ, தேவனுடைய உக்கிராணக் காரர்களாக இருப்பது, சந்தோஷமும், சிலாக்கியமுமாக இருக்குமானால், "**தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக் காரர்களாக**" (1 பேது. 4:10) இருப்பதும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பகிர்ந்தளிக்கும் படியாக அனுமதிக்கப் படுவதும் எவ்வளவு அதிக ஆசீர்வாதமுள்ளதாக இருக்கும்! கிறிஸ்துவின் ஒவ்வொரு சீஷனும் ஒரு உக்கிராணக் காரனாக பெரிய காரியங்களிலும், சிலர் சிறிய காரியங்களிலும் இருக்கிற உண்மையை நாம் பாராட்டுகிறோமா? சிலர் அதிக தாலந்துள்ளவர்களாகவும், சிலர் குறைவான தாலந்துள்ளவர்களாகவும் இருக்கலாம். இருந்த போதிலும் ஒவ்வொரு மனுஷனுக்கும் (கிறிஸ்துவின் ஒவ்வொரு சீஷனுக்கும்) அதைக் கொண்டு பயனடைய அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு குறிப்பிட்ட அளவு ஆவியானது கொடுக்கப்படுகிறது. (1 கொரி. 12:7)! உங்களிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள தாலந்துகளை நீங்கள் எப்படி பயன்படுத்துகிறீர்கள்? எங்களிடம் சொல்வதற்கு முன்பாக, இரண்டு பட்டணங்கள், ஐந்து பட்டணங்கள் அல்லது அநேக காரியங்கள் மீது ஆளுகை செய்கிறவர்களாயிருங்கள் அவர் நம்முடைய உக்கிராணப் பொறுப்பைக் குறித்து கணக்கு கொடுக்கும் படி நம்மிடம் கேட்பார். அவர் இன்னொருவனுடைய உக்கிராணப் பொறுப்பைக் குறித்த கணக்கு ஒப்புவிக்கும்படி ஒருவனிடம் எதிர்பார்க்க மாட்டார், ஆனால் ஒவ்வொருவனும் தன்னுடைய சொந்த கணக்கை ஒப்புவிக்கவேண்டும். தன்னுடைய எஜமானரிடம் ஒவ்வொரு ஊழியக்காரனும் தன்னுடைய கணக்கை ஒப்புவித்து நிற்பான் அல்லது வீழ்ச்சியடைவான். (லூக். 19:16-19).

ஆனால் நம் ஒவ்வொருவருக்கும் விசேஷித்த ஆசீர்வாதங்களாகிய அறிவும், சத்தியமும் கொடுக்கப் பட்டிருக்கிறது உண்மையாயிருக்கையில் அவற்றுடன் சில குறிப்பிட்ட பொறுப்புகளும் வருகிறது. நாங்கள் உங்களைப் பயப்படுத்துவதைக் காட்டிலும், அன்பாயிருக்கவே தூண்டுகிறோம். நாம் கிறிஸ்துவின் ஆவியாகிய அன்பைப் பெற்றிருப்போமானால், நமக்கு இவ்வளவு அதிகமான நன்மையைச் செய்திருக்கிறதும், நம்முடைய மனங் களிலிருந்து மேகங்களை நீக்கிவிட்டு தேவனுடைய அன்பாகிய தெளிந்த சூரிய பிரகாசத்திற்குள் நம்மைக் கொண்டு வந்திருக்கிறதும், நம்முடைய பரம பிதாவின் குணாம்சத்தின் மகத்துவத்தையும், அவருடைய வார்த்தையின் அழகு மற்றும் இசைவுகளையும், "**கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தையும்**" (எபே. 2:7) குறித்து நமக்கு வெளிப்படுத்தி இருக்கிறவை களை மற்றவர்களிடம் கொண்டு செல்ல அனுமதிக்கப் பட்டிருக்கிற மகா பெரிய சிலாக்கியத்தை நாம் மிக உயர்வாக கருதுவோம். அது நம்முடைய இருதயங்களை "**எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை**" கொண்டு வரும் (லூக். 2:10) பரலோக இசைக்கு இசைவான இனிய மெல்லிசையை தொனிப்பதற்கு தயாராக்குமானால், மற்றவர்கள் மீதும் அது இதே விளைவை ஏற்படுத்த வேண்டாமா? நம் ஒவ்வொருவருடைய இருதயங்களிலும் நிரம்பியிருக்கிற அந்த கதை பற்றி எரிகிற அக்கினியைப் போல, நம்முடைய இருதயங்களில் உள்ள எல்லா கசடுகளையும் நீக்கிப் போடுவதுடன் நாம் தொடர்பு கொள்கிற எல்லாரிடத்திலும் நெருப்பூட்டி விடும், அந்த விதவையின் எண்ணெய் குடத்தைப் போல, நம்முடைய பொக்கிஷம் நிரப்பப்பட தயாராக உள்ள எல்லா மண்பாண்டங்களையும் வழிந்தோடும்படியாக நிரப்பும். ஓ, "நான் அந்த கதையைச் சொல்ல விரும்புகிறேன்" – என்ற அந்த அழகான பாடலின் ஒவ்வொரு வார்த்தையும் – எல்லோருக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததும், இருதயத்தைத் தொடும் வெளிப்பாடாகவும் இருக்கலாம்.

*"அந்த கதையைச் சொல்ல விரும்புகிறேன்*
*அதை திரும்பத் திரும்ப சொல்லுவது ஆனந்தமே.*
*அதை நான் சொல்லும் ஒவ்வொரு தடவையும்*
*தோன்றுவதென்னவென்றால்*
*அதிக ஆச்சரியமான இனிமையாயிருக்கிறது.*
*அந்த கதையைச் சொல்ல விரும்புகிறேன்,*
*அது எனக்குச் செய்தது மிக அதிகமே.*
*அந்த காரணத்தினால் அப்படியே, நான் இப்பொழுது*
*அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்."*

மேலும், நாம் "**நன்மை செய்யவும், தானதர்மம் செய்யவும்/பகிர்ந்து கொடுக்கவும்**" வேண்டுமானால் எப்படி நாம் அந்த கதையைச் சொல்ல வேண்டும்? எளிமையாக அதைச் சொல்லுங்கள். தெளிவாக அதைச் சொல்லுங்கள்; உங்களுடைய மையக்கருத்தின் மகத்துவம் முழுவதுமாக உள் வாங்கப்படட்டும். உங்களையும், நீங்கள் கற்றுக் கொண்டதையும் மறந்து விடுங்கள்; சகலமும் "**இயேசுவையும் அவருடைய அன்பைப் பற்றியதாகவும்**" இருக்கட்டும். தேவனுடைய ஜனங்களில் மிக அதிகமானோர், அவர்கள் அதைக் கொண்டு சண்டை செய்ய முடியும் என்பதால் மட்டுமே இந்த கதையை சொல்வதில் சந்தோஷ மடைகிறார்கள். அவர்கள் விவாதத்தில் ஒருவரை அடித்து வீழ்த்துவதுபோல, சத்தியத்தைப் பயன்படுத்துவதில் களிகூருகிறார்கள். இது இன்னும் மரிக்காத, பழைய சுபாவத்தின் தன்மையாகும். அது கர்த்தருடைய யுத்தங்கள் அல்லது ஆவிக்குரிய போர் நடவடிக்கை என்று அதை சொல்லிக் கொண்டு சண்டை செய்வதற்கான தன்

உரிமையை வலியுறுத்துகிறது. வருத்தந்தருகிற ஒரு தவறு; இது ஆவியின் கனிகளான – சாந்தகுணம், தயவு, பொறுமை, அன்பு ஆகியவைகளுக்கு நேர்எதிரான மாம்சத்துக்குரிய சுபாவத்தின் ஒரு ஆதாரக் கூறை வளர்த்துக் கொள்ளும்படியாக வஞ்சிக்கப்படாதிருங்கள்.

"**தேவனுடைய வார்த்தை**" "**ஆவியின் பட்டயம்**" என்று (எபே. 6:17) உண்மையாகவே நமக்கு சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அது நம்முடைய பட்டயமல்ல என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். ஆவியானது தன்னுடைய வெட்டும் வேலையை தனக்கே உரிய வழியில் செய்கிறது, ஆனால் நம்மிடம் அது "**உன் பட்டயத்தை உறையிலே போடு**" (யோவா. 18:11) என்று சொல்கிறது. நமக்குரிய கட்டளை, வெளிச்சத்தை சுமப்பவர்களா யிருங்கள் என்பதே ஆகும். ஆவியின் கனிகளை பிரதிபலித்துக் காட்டுவதன் மூலமாக மனுஷர் உங்கள் நற்கனிகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் படிக்கு, "**உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக் கடவது.**" தேவனுடைய வார்த்தையே விளக்கு. அதன் வெளிச்சத்தால் கிறிஸ்துவின் நீதி மற்றும் சத்தியத்தை ஆடையாகத் தரித்துக் கொண்டு, பின்பு அதை மற்றவர்கள் உங்கள் தூய்மையான ஆடைகளை பார்த்து, அதை வாஞ்சிக்கும்படி வழி நடத்தப்பட அவர்களுக்காக உயர்த்திப் பிடிக்க வேண்டும். அதன் பின்பு அவர் மற்றவர்களைத் தாழ்மைப்படுத்துவது தகுதியென்று அவர் காண்பதால்,தேவனுடைய ஆவி அவருடைய பட்டயத்தை அவர்கள் மீது உபயோகித்து, அவர்களுடைய பெருமையை அகற்றி, அவர்களைக் காட்டிலும் உயர்வான கன்மலைக்கு அவர்களைக் கொண்டு வந்து சேர்ப்பதாக.

இருளைக் காட்டிலும் வெளிச்சத்தை நேசிக்கிறவர்கள் சிலர்தானே இருக்கிறார்கள் என்பதற்காக நாம் சோர் வடைந்து விடக்கூடாது. இந்த உலகத்தின் தேவனானவன் பெரும்பாலானோரின் மனங்களை இருளடையச் செய்து, அவர்கள் சத்திய வெளிச்சத்தை உணர்ந்து பாராட்டக் கூடாதபடி செய்ததில் வெற்றி பெற்றிருக்கிறான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அப்படியிருப்பதால், நாம் பாவத்தினாலும், அறியாமையினாலும் முழுவது மாகவோ அல்லது கொஞ்சமாகவோ குருடாக்கப்பட்ட ஆண்களாலும், பெண்களாலும் சூழப்பட்டிருக்கிறோம். முழுவதுமாக குருடாக்கப்பட்ட சிலர் நற்செய்தி பற்றிய ஒன்றையும் பார்க்கவோ உணர்ந்து பாராட்டவோ முடியாதவர்களாயிருக்கிறார்கள். மற்றவர்கள் மிக கொஞ்சமாக பார்ப்பார்கள், ஆனால் தூரத்தில் உள்ளதைப் பார்க்க முடியாதவர்களாயிருக்கிறார்கள்: அவர்கள் தற்போதய "பொல்லாத உலகத்தை" (யுகம்) மட்டுமே பார்க்க முடிகிறது. அவர்கள் தூரத்தில் உள்ளதை – வரப்போகிற யுகங்களில் தேவன் எப்படி தம்முடைய கிருபை மற்றும் தம்முடைய அன்பிரக்கமாகிய மிகுதியான ஐசுவரியங்களை நம்மிடமாக – கிறிஸ்து இயேசுவுக்குள் (எபே. 2:7) (இருக்கிறவர்களுக்கு மட்டுமே) காட்டுவார் என்பதையும், மேலும் எப்படி அவருடைய திட்டம் யூதர் மற்றும் புறஜாதியார் இருவருமே உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள் (ரோம. 11:31) என்பதையும் காண முடியாத காரணத்தினால் அதிகமான இன்பம் மற்றும் சந்தோஷத்தை இழந்து விடுகிறார்கள். நிச்சயமாகவே சரீரப்பிரகாரமான பார்வையை பெலப்படுத்தி சுகமாக்குவது, மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது, ஆவிக்குரிய குருட்டுத்தனத்திலிருக்கிறவர்களும் நம்முடன் சேர்ந்து பாடுவதில் களிகூரும்படி ஆவிக்குரிய கலிக்கமாகிய – தேவனுடைய வார்த்தைக்கு அவர்களை வழிநடத்து வதில் அதைவிட அதிகமாக நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

*"ஓ! அந்த எதிர்பார்ப்பு, அது மிக பரவசமான உணர்வு*
*அறுவடையாளர்களே, விரைவாகக் கூட்டிச் சேருங்கள்,*
*நாங்கள் ஜெபிக்கிறோம்."*

அநேகருடைய விஷயத்தில்; "**அவைகளுக்கு கண்களிருந்தும் காணாது, அவைகளுக்கு காதுகளிருந்தும் கேளாது**" (சங். 115:5,6) என்று சொல்லப்பட்ட போதிருந்–ததைப் போல் இன்றும் உண்மையாகவே இருக்கிறது. தெளிவாகவும், வெளிப்படையாகவும் காண்கிறவர்களும் கேட்கிறவர்களுமான, தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார் மற்றும் குவாசி எலக்ட் வகுப்பாரைத் தவிர,வேறு எவருக்குமேஇந்த யுகம் தகுதி காணும் காலப்பகுதியை முடித்து வைக்கவில்லை என்பதை தேவன் தம்முடைய வசனமாகிய விளக்கின் மூலமாகக் காட்டுகிறார். இயேசுவின் மீட்கும் பொருள் காரணமாக, இழந்து போனதை திரும்பக் கொடுத்தலின் யுகம் ஒன்று இருக்கிறது. (அப். 3:19-21). "**அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின்செவிகள் திறவுண்டுபோம்.**" அப்போது எல்லாரும் சத்தியத்தை அறியும் அறிவை அடைவார்கள். கர்த்தரை அறிகிற அறிவு பூமி முழுவதையும் நிரப்பும். ஒருவனும் தன் அயலானிடம் "கர்த்தரை அறிந்து கொள்" என்று சொல்லமாட்டான், ஏனெனில் சிறியவன் முதல் பெரியவன் வரை எல்லாரும் அவரை அறிந்திருப்பார்கள். (ஏசா. 35:5; 11:9; 1 தீமோ. 2:4; எரே. 31:34).

ராஜ்யத்தைப் பற்றிய நற்செய்தியையும், தேவனைப் பற்றிய ஆழ்ந்த காரியங்களையும் அறிவிக்கும் போது, நாம் இயேசுவின் முன்மாதிரியை பின்பற்ற நாட வேண்டும், அதாவது, எல்லா சமயங்களிலும், கிறிஸ்துவின் நீதியை எல்லா மனுஷரிடமும் உயர்த்திப் பிடித்துக் கொள்ளும் பொழுது, அவ்வாறாக நாம் அவர்களுக்கு "**ஜீவனுள்ள நிருபங்களாக,**" இருக்க வேண்டும். தேவனுடைய ஆவியைப் பெற்றிருப்பதாகக் காணப்படுகிறவர்களுக்கு நாம் "**தேவனுடைய ஆழமான காரியங்களை**" எடுத்துக் கூற நாட வேண்டும். (1 கொரி. 2:9-16)

ஆவிக்குரிய அல்லது ஆழமான காரியங்கள், ஆவியைப் பெற்றிருக்கிறவர்களைத் தவிர மற்றவர்களால் பகுத்தறியப்பட முடியாது. "**கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்.**"(மத். 11:15). எனவே, இதுவே நாம்

பின்பற்றுகிற வழி முறையாயிருக்க வேண்டும். ஆகையால் கேட்கிற காது இல்லாமல் யாராவது இருப்பதை வெளிப்படையாக நாம் காணும் போது, அப்படிப்பட்டவனுக்கு சொல்லுவதை விட்டுவிட வேண்டும். நீங்கள் அவனுக்கு காது கொடுக்க முடியாது; தேவன் தம்முடைய "**ஏற்ற சமயத்தில்**" அதைச் செய்வார். விலையேறப்பெற்ற காலத்தையும், திறமையையும் வீணாக்க வேண்டாம், அன்பிலும், அனுதாபத்திலும் தேவனிடம் அவர்களை விட்டுவிடுவதுடன், அவர்களுடைய பாதையில் எந்த தடையையும் போட வேண்டாம்.

எப்பொழுதாவது நீங்கள், "**கபடற்ற உத்தம இஸ்ரயேலனாக**" காணப்படுகிறவனை சந்திக்கும் போது, அப்படிப்பட்டவனிடம், "**கேட்கிறதற்கு ஏற்ற காது**" இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அவனிடம், உங்கள் இருவருக்கும் அதிக பழக்கமான ஆவிக்குரிய காரியங்கள் பற்றி முதலில் உரையாடலாம், அதனால் அவன் உங்களை கிறிஸ்துவைப் பின்பற்றுகிற பிரதிஷ்டை செய்தவனாக- ஒரே ஆவியினால் நடத்தப்படுகிறவனாக உணர்ந்து ஏற்றுக் கொள்வான். - பின்பு அப்படிப்பட்டவனுக்கு, தேவனுடைய ஆழமான காரியங்களையும் உங்களுடைய தோழமை யையும், வார்த்தைகளினால் சண்டையிடுவதற்குப் பதிலாக, இருவருக்குமே பிரயோஜனமானதும், ஆசீர்வாதமானது மானவைகளை கொடுக்க வேண்டும், நம்முடைய பாடவசனத்தின் அர்த்தத்தை முழுமையாகப் பாராட்டு வதற்கு, நாம் அதை உணர்கிறது வரை நன்மை செய்யவும், தானதர்மம் செய்யவும் பகிர்ந்து கொடுக்கவும் வேண்டும். அப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் மிகவும் பிரிய-முள்ளவராயிருக்கிறார். ஒரு டாலர் பணம் அல்லது ஒரு கணநேரம் அல்லது ஒருமணி நேரத்தை பலியிடுவதினால் மட்டும் நமக்கு வேறெந்த பயனும் ஏற்படுவதில்லை. நீங்கள் அதனை உணரும் வரைக்கும் கொடுங்கள். அதன்பின்பு "**இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்**" என்பதை நீங்கள் உங்கள் இருதயத்தில் எதிர்பார்க்கலாம்.

"**மனிதர்கள், கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும் மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஸ்தோத்திர பலிகளை செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக.**" (சங். 107:21,22).




# பகுத்தாராயும் சிலாக்கியத்தை புரிந்து கொள்ளுதல்

Understanding the privilege of reasoning

"**வழக்காடுவோம்** (பகுத்தாராய்வோம்) **வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**" (ஏசா. 1:18).

பகுத்தாராய்தல் மனித மனதின் மிகச் சிறப்பான திறமையும், மனுஷீகத்தில் தெய்வீக சாயல் இருப்பதற்கான முக்கியமான அடையாளமாகவும், உண்மையுள்ள பிரதிஷ்டை செய்த பிள்ளைகளை கவனமாக சிந்திக்கும்படி அழைக்கிற தேவனிடம் ஐக்கியம் கொள்ள மனிதனை தகுதியுள்ளவனாக்குவதும் ஏசா. 1:18-ல் கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய அழைப்புக்கு பாத்திரவான்களாக தங்களை நிரூபிக்கிறதுமாயிருக்கிறது. எபிஃபெனி வேதாகம மாணாக்கர்கள் என்ற வகையில், நம்முடைய புலன்களை பகுத்தறியும்படியாகப் பயன்படுத்த பயிற்சி செய்ய நாம் நாட வேண்டும்! கர்த்தர், தம்மில் விசுவாசம் கொண்டிருப்ப வர்களைத் தவிர, வேறு எவருடனும் ஒருபோதும் பகுத்தறிவதில்லை என்பதை நாம் நிச்சயமாக அறிந்து கொள்வோமாக.




பொதுவான மதம் பற்றிய புரிதலின் வரம்புக்குள், எல்லாவற்றையும் இரகசியம் என்று மூடி மறைக்கிற போக்கு

எப்போதுமே இருந்து வருகிறது. அதன் விளைவு ஏற்றதும், போற்றத்தக்கதுமான விசுவாசப் பயிற்சியாயிருப்பதற்கு மாறாக, அறிவுள்ள ஜனங்கள் பகுத்தறிவின் உபயோகத்தை தள்ளிவிட்டு தங்களின் விசுவாசத்தை எதையும் எளிதாக நம்புகிற ஒன்றாக குறைத்து விடுவதாகத் தெரிகிறது, தேவனால் கொடுக்கப்பட்டுள்ள பகுத்தறியும் திறமை பரிசீலித்து ஏற்றுக் கொள்ள முடியாத விஷயங்களை கேள்வி எதுவும் கேட்காமல் ஏற்றுக் கொள்ளும்படி சிருஷ்டிகர் நம்மிடம் கேட்டுக் கொள்ளவில்லை. தேவனுடைய பூமிக்குரிய சிருஷ்டிப்புகள் எல்லாவற்றிலும், மனுக்குலத்தாரைப் பற்றி மட்டுமே, "**நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக**" (ஆதி. 1:26) என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனுஷனுக்கும், மனுஷிக்கும் கொடுக்கப்பட்டுள்ள அப்படிப்பட்ட அற்புதமான, தேவ இயல்பின் திறமையான பகுத்தறியும் ஆற்றல் நமக்கும், நம்முடைய சிருஷ்டிகருக்கும் இடையே மனசாட்சியைப் பிரதிபலிக்கும் விதத்தில் பதிலளிக்கத்தக்க தொடர்பு கொள்ளுதலை சாத்தியமாக்கியது.

## நீங்கள் எப்போதாவது தேவனுடன் பேசியிருக்கிறீர்களா?

நிச்சயமாக! தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களும், அவருடன் ஓரளவாவது உறவுக்குள்ளாக வந்திருக்கிறவர்களும் அவருடன் ஒரு பயபக்தியுள்ள நண்பனைப் போல காரியங்களைப் பேசிக்கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கின்றனர். அப்படிப்பட்டதோர் சிலாக்கியம் அது! மேலும் அப்படிப்பட்ட மகா வல்லமையும், அப்படிப்பட்ட மாட்சிமையும், அத்தகைய புத்திக்கெட்டாத மகிமையுடைய சகலத்தையும் சிருஷ்டித்த வரான தேவனுடன் பேசுவதற்கான நம்முடைய முயற்சியையும், அவர் நட்புக்கரம் நீட்டி, நம்முடன் தொடர்பு கொண்டு உரையாட வாஞ்சிப்பது நம்மை மிகவும் ஆச்சரியத்துடன் பிரமிப்படையச் செய்கிறது.

## தேவன் ஏன் தம்முடைய நட்புக் கரத்தை நீட்டுகிறார்?

நம்முடைய ஆதி பெற்றோரின் கீழ்ப்படியாமையினால், பொதுவாக மனுக்குலத்தார் எல்லாருடனும், நாம் கிருபையிலிருந்து விழுந்து, குமாரத்துவ சிலாக்கியங்களுக்கு இனி ஒருபோதும் தகுதியற்றவர்களாக, ஆரம்பத்தில் பகலின் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் தேவன், ஆதாம் மற்றும் ஏவாளுடன் உலாவின போதும், பேசிய போதும் இருந்த அந்த அன்புள்ள நெருக்கமான உறவிலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். (ஆதி. 3:8).

ஆயினும் இப்போதும் அவர் அந்த உறவு முறிவை சீர்ப்படுத்தும் படியாக – நம்மையும்கூட அவசரப்படுத்த விரும்புகிறார்: "**வழக்காடுவோம், வாருங்கள்**" என்று சொல்கிறார். அப்படியானால், நாம் சுதந்தரித்துக் கொண்டதும், நாம் சம்பாதித்துக் கொண்டதுமான குற்றங்கள் மற்றும் தோல்விகளை அவர் புறக்கணித்து, அவருடன் திரும்பவும் ஐக்கியத்துக்குள்ளாக வரும்படி நம்மை அழைத்துக் கொள்ள ஆயத்தமாயிருக்கக் கூடுமா? நம்முடைய பரமபிதா நம்மீது மிகுந்த கவலையுடன், இயேசுவினுடைய உவமையில் சொல்லப்பட்டுள்ள கெட்ட குமாரனின் தகப்பனைப் போலவே, நம்முடைய பலவீனங்களில் நம்மீது மனதுருக்கம் கொண்டவராக, கடைசியில் தூரத்தில், அவரை நோக்கி நாம் வருவதைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியடைவாரா? அப்படியாகத் தானிருக்கும், ஆனால் – நாம் வழக்காடுவோமாக – ஏனெனில் தேவன் ஆதாமையும், அவனது சந்ததியையும் நீதியாக ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தினார், நிச்சயமாகவே, அவர் தமது தீர்ப்பை மாற்றியமைக்க முடியாது அல்லவா? தெய்வீக அன்பு அவருடைய நீதியெனும் குணப்பண்பை செல்லாததாக்க முடியுமா? முடியாது!

தேவன் தமது சொந்த நீதியை ஒருபோதும் மீறமாட்டார் என்ற நம்முடைய உள்ளுணர்வை, வேதவாக்கியமும், பகுத்தறிவும் உறுதிப்படுத்துகின்றன. சங்கீதக்காரன் சொல்லியிருக்கிறது போல் "**நீதியும், நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்**" (R.V-ல் அஸ்திபாரம்) (சங். 89:14). மேலும் ஆபகூக், "***கர்த்தாவே, தீமையைப் பார்க்க மாட்டாத சுத்த கண்ணனே, அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்க மாட்டீரே***" (ஆப. 1:12,13) என்று அறிவிக்கிறார் – நீதிபரர், தீமையையோ அல்லது பாவத்துடன் உடன்படுவதையோ அங்கீகரிக்க முடியாது.

## அப்படியானால், எப்படி நாம் அவரிடம் வர முடியும்?

நாம் அவரிடம் வரமுடியும், ஏனெனில் அவர் நம்மிடம்! "**உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்**" என்று கூறுகிறார். ஆனால் நாம் துர்க்குணத்தில் உருவாக்கப்பட்டு பாவத்தில் பிறக்கிறோம் என்று சொல்லப்பட்டிருப்பதால், அதை எப்படி அடைந்து கொள்ள முடியும்? இதற்கான பதில் இரகசிய மானதல்ல. இது பகுத்தறிவுக்குப் பொருத்தமானதும், நியாயமானதுமாயிருக்கிறது. தேவன் தம்முடைய மிகுதியான அன்பினால், பாவத்தின் விளைவுகளிலிருந்து உலகத்தாரை விடுவிக்க, ஒரு வழியை ஏற்படுத்தியுள்ளார். ஒருவனுடைய (ஆதாம்) மீறுதலினாலே எல்லாரும் தேவனிடமிருந்து பிரிந்து மரணாக்கினைக்குட்படுத்தப் பட்டார்கள். இன்னொருவருடைய (இயேசு) பதிலீடான பலியினாலே ஆதாமும், அவனுடைய சந்ததிகளும் விடுவிக்கப்பட இருக்கிறார்கள். பூரண மனுஷனாகிய இயேசுவின் சுத்திகரிக்கும் இரத்தத்தை தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு இரத்தாம்பர சிவப்பு கறையான பாவம் துடைத்து அழிக்கப்படும். அவர் மட்டுமே தெய்வீக நீதியை திருப்தி செய்ய முடியும். தேவன் நம்மை

இப்போது நோக்கிப் பார்க்கும் போது, அவர் நமது பாவக் கறைகளை இனி பார்ப்பதில்லை; ஆனால் கிறிஸ்துவின் நீதி நம்மை மூடியிருப்பதைக் பார்க்கிறார். அப்படியே, நம்முடைய கறைதிரைகளை மறைக்கிற அடையாளமான வெண்மையான வஸ்திரமாகவே காண்கிறார்: மேலும் "**வழக்காடுவோம் வாருங்கள்**" என்று அவர் அழைக்கிறார்.


## நாம் கிரயம் கொடுத்து மீட்கப்பட்டிருக்கிறோம்

பாடுகள், மரிக்கிற வழிமுறையின் பாகமாக இருந்தாலும், இரட்சகரின் பாடுகள் நம்மை இரட்சிக்கிற தில்லை. நம்முடைய இடத்தில் அவர் மரித்ததே ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து நம்மை விடுவிக்கிறது. ஆதாமையும், அவனுக்குள்ளிருந்த எல்லோரையும் விடுதலையாக்கு வதற்காக தேவனுடைய நீதி கேட்டவிலை கிரயத்தை அவர் செலுத்தினார். இல்லையெனில்,விதிவிலக்கு இன்றி அனைவரும் மரித்துப் போயிருப்பர். இந்த ஏற்பாடு, நமக்கு தேவனுடைய ஒழுங்கு சிக்கனத்தை, அதாவது, ஏற்ற சமயத்தில் கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவதற்கு ஒரே இரட்சகர் போதுமானதாயிருப்பதை இங்கே பகுத்தறிவு வெளிப்படுத்துகிறது. (1 தீமோ. 2:6; 1 கொரி. 15:22). பகுத்தாராய்கிற மனம் இயேசு கொடுத்த ஜீவன் என்றென்றைக்குமாக பலியிடப்பட்டிருக்கிறது என்பதையும் கூட புரிந்து கொள்கிறது. அவர் கொடுத்த கிரயத்தை, மீண்டும் பெற உரிமைகோர முடியாது. ஆகவே அவருடைய உயிர்த்தெழுதலில் நம்முடைய கர்த்தர் மனுஷ ஜீவனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை, ஆனால் தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டார், மேலும், அவர், "***இனி உலகம் என்னைக் காணாது***" (யோவா. 14:19) என்றும் கூறினார். பகுத்தறிவுக்குப் பொருத்தமானதா? ஆம்! நியாயமானதா? ஆம்!

## தேவனை கனம் பண்ணுவோமானால், அவரும் நம்மைக் கனம் பண்ணுவார்

உண்மையான நட்பு என்பது மனங்களும், இருதயங்களும் சந்திப்பதும் கனம் பண்ணுதல், உள்ளன்பு மற்றும் உத்தம நம்பிக்கை ஆகியவற்றின் மீது கட்டப்பட்டிருப்பதுமாகும். ஒரு நல்ல பூமிக்குரிய தகப்பன் நம்பிக்கைக்குரியவராயிருப்பதிலும், தன்னுடைய பிள்ளைகள் காரியங்களைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசுவதற்கு தன்னிடம் தயக்கமின்றி நெருங்கிச் சேர்வதிலும் களிகூருவான். அநேக தகப்பன்மார்கள் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்க்கிறவராக - குறைந்த பட்சம் சிறுபிள்ளைகள் அந்தத் தேவையைத் தாண்டி வளரும் வரைக்குமாவது அப்படி இருக்கிறார்கள்!

அதுபோல், நம்முடைய பரமபிதாவானவர், நம்முடைய அன்றாட கவலைகள், நம்முடைய வெற்றிகள், தோல்விகள், நம்முடைய நம்பிக்கைகள் மற்றும் பயங்கள் யாவையும் பற்றி அவரிடம் சொல்லும்படி நம்மை அழைக்கிறார். வேதாகம உபதேசங்கள் பற்றிய பிரச்சினையோ அல்லது கிறிஸ்தவ ஜீவியத்தின் காரியங் களிலிருந்து எழும்புகிற பிரச்சினைகளோ நமக்கு இருந்தால், நம்முடைய இயல்பான புகலிடம் நம்முடைய பிதாவிடம் நாம் ஆலோசிப்பதாகும். நிச்சயமாகவே நம்முடைய அணுகுமுறை மனத்தாழ்மையுள்ளதாகவும், இவ்வளவு பெரிதான ஒரு கனத்தை அங்கீகரிக்கிறதாகவும் உள்ளது. ஆனால் நாம் தகுதியற்றவர்களாக எண்ணிக் கொள்வதன் காரணமாகவோ அல்லது அநேகமாக, ஒரு வேளை, தடுப்பதற்கு நாம் ஆர்வமற்றவர்களாக இருக்கிற சில அடக்கப்படாத குணாம்சத்தை அவரிடமிருந்து மறைக்க விரும்புவதால், அவருடைய அழைப்பை மறுக்கிறவர்களாக இருக்கிறோம். அதன் மூலமாக அவருடைய மகாபெரிய அன்பை வீணாக்கி, அவருடைய தகப்பனுக்குரிய நட்பின் கரத்தை இகழ்ந்து புறக்கணிக்கிறோம். இவையெல்லா வற்றிலும் வருந்தத்தக்கது என்னவெனில், ஒழுங்கு முறைப்படியான கலந்தாலோசிக்கும் தேவைக்கும் மேலாக நாம் வளர்ந்து விட்டதாக எண்ணிக் கொண்டு, அவரிடம் தோழமை நிலையைக் காத்துக் கொள்வதற்கு நாம் ஒட்டு மொத்தமாக வராமலிருப்பதாகும். கர்த்தாவே, நான் உம்மில் களிகூருகிறேன், உம்முடைய பராமரிப்பை நம்பியிருக்கிறேன்; ஒவ்வொரு துன்பத்திலும் உம்மிடமே பறந்து வருகிறேன், என்னுடைய மிகச்சிறந்த என் மெய்யான நண்பன் நீரே; என்று எங்கள் இருதயத்தின் வாஞ்சையும் பகுத்தறிதலும் எப்போதும் சொல்லுவதற்கு எங்களை வழிநடத்தும்படி தேவன் அருள் புரிவாராக. ***




LHMM - India
Watch us on YouTube™

# தகுதியானதும் தகுதியற்றதுமான இலட்சியங்கள்

## Worthy and Unworthy Ambitions

"**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்.**" (மத். 6:33).

மகாபெரிய போதகர் நம்பத்தகாத எதையும் போதிக்கவில்லை. அவர் பிதாவின் வேலையில் மிகவும் மும்முரமாக செயல்பட்டு தம்மைப் பின்பற்று கிறவர்களுக்கு, "**அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்: ஆவியிலே அனலாயிருங்கள்: கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்**" என்று போதித்தார். ஆயினும், நம்முடைய ஆற்றல்கள் பூமிக்குரிய பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிற சுயநலமான முறையில் இருக்கக் கூடாது என்றும், அதற்குப் பதிலாக பொக்கிஷங்களை நாம் பரலோகத்தில் சேர்த்து வைக்க வேண்டும் என்றுதான் அவருடைய உபதேசம் இருக்கிறது. பூமிக்குரிய பொக்கிஷங்களைக் குறித்து பூச்சி அரித்தல் மற்றும் துருப்பிடித்தல் மற்றும் திருடர்கள் கன்னமிட்டுத் திருடுதல் ஆகிய குறிப்புகள் இருப்பதால், இந்த கோட்பாடானது விஸ்தாரமான ஒன்று என்றும், அவருடைய போதனை உயர்வான நிலைக்குரியது என்றும் நாம் புரிந்து கொள்கிறோம். மிக அசாதாரணமான சூழ்நிலைகளின் கீழ் அல்லாமல், வேறு எந்த சூழ்நிலையிலும் தேவைப்படும் காலத்துக்கு மிக முன்னதாக உடைகளையோ அல்லது உணவுகளையோ சேர்த்து வைப்பது அறிவற்ற நடத்தையாயிருக்கும் என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால் பொன் பொக்கிஷமாக சேர்த்து வைக்கப்படலாம், அல்லது வங்கியில் பணம் அல்லது பத்திரங்கள் அல்லது பங்கு பத்திரங்கள் அல்லது நிலத்தோடே நிலமும், வீட்டோடே வீடும் சேர்க்கப் படலாம் மற்றும் அதே கோட்பாடும் சம்பந்தப்பட்டிருக்கும். ஆயினும் எந்த பூச்சியும் வங்கி கணக்கை அரிக்க முடியாது அல்லது, எந்த துருவும் பொன்னை சேதப்படுத்தாது, மேலும் எந்த கள்ளனும், சொத்திற்குரிய உடமைப் பத்திரங்களை திருட முடியாது என்ற போதிலும் தாற்பரியம் அதே தான்.

எந்த வகையிலான பொக்கிஷங்களும் தங்கள் மதிப்பை இழந்து விடும்; அதற்கு முன்பாக, இல்லை யென்றாலும் நாம் மரிக்கும் போது, அவை நமக்கான தங்கள் மதிப்பை இழந்து விடுகின்றன. எவ்வளவு கவனத்துடன் அல்லது ஆழ்ந்து சிந்தித்து செய்திருந்தாலும் மரணம், அழிவு ஆகியவை பூமிக்குரிய எல்லாவற்றையும் தற்கால நிலைமைகளின் கீழ் பாதிக்கிறது. "**நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்: நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்**" (யோபு 1:21). பிரேதக் குழிக்கும் அப்பால், எதிர்கால வாழ்வு ஒன்றை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார் என்றும் உயிர்த்தெழுதலின் காலையில் தான் அதைப்




பெற்றுக் கொள்ள முடியும் என்றும் புத்திசாலியான ஜனங்கள் பொதுவாக ஒத்துக் கொள்கின்றனர். அப்பொழுது நம்முடைய ஆசீர்வாதத்தின் அளவு, தற்போதய ஜீவியத்தை நாம் பயன்படுத்துவதற்கு பொருத்தமான தொடர்புடையதாக இருக்கும் என்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. இந்த கருத்தை தான் மகா பெரிய போதகர் நம்முடைய பாட வசனத்தில் வலியுறுத்தியிருக்கிறார். புத்தியுள்ள எல்லா மனங்களும் இதிலுள்ள நியாயத்தை ஏற்றுக்கொள்ளும்.

சிலர் பின்பற்றுகிறபடி உச்ச அளவிலான போக்கை நாம் பின்பற்றாதிருப்போமாக; ஜனங்கள் தங்கள் சொந்த சௌகரியத்துக்காக நியாயமான ஏற்பாட்டைக் கூட செய்யாமல், அவர்கள் தங்கள் முதிர்வயதில் கருணை உதவிகளைச் சார்ந்திருக்க வேண்டும் என்று எஜமானர் போதித்ததாக நாம் கருதக் கூடாது. பெற்றோர்கள் தங்களைச் சார்ந்திருக்கும் குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கான தங்கள் கடமைகளைக் குறித்து அக்கறையற்றவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் அர்த்தப்படுத்துவதாக நாம் நினைக்க வேண்டாம். "**ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான்**" என்று வேதாகமம் தெளிவாக போதிக்கிறது. அப்படியானால் சரியான கருத்து என்னவெனில், சிக்கனமாயிருப்பது சரியானதே, இதைக் குறித்து பரி. பவுல், "**வருங்காலத்திற்காக தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வையுங்கள்**" என்று விளக்குகிறார், ஏனெனில் அவை நம்முடைய சொந்த எதிர்கால தேவைகளுக்காகவோ அல்லது மற்றவர்க ளுக்கோ தேவை ஏற்படும் போது கடன் கொடுக்கவோ அல்லது பிறருக்கு கொடுக்கவோ வேண்டியிருக்கும். தேவனுடைய ஜனங்கள் சிக்கனமுள்ளவர்களாகவும்,


கடன்களைத் தவிர்க்கவும் எதிர்காலத்துக்கு முன்னேற்பாடாகவும் கொஞ்சம் கையிருப்பு மூலதனம் கொண்டிருக்க வேண்டும். ஆனால் பூமிக்குரிய காரியங்கள் அவர்களுடைய ஆத்துமாக்களுக்கான பொக்கிஷங்களாக இருக்கக் கூடாது, அதற்கு மாறாக அவைகள் அவர்களுடைய ஊழியக்காரர்களாக, சமயத்துக்கு உதவுகிறவைகளாக – எந்தவித அவசர தேவைகளுக்கும் தாராளமாக, மனப்பூர்வமாக எப்போதுமே பயன்பாட்டுக்கு தயாராக இருக்க வேண்டும். இந்த போக்கைப் பின்பற்றுகிற எவரும் பெரிய அளவிலான பூமிக்குரிய செல்வத்தின் மீது எப்பொழுதும் பேராவல் கொள்ள மாட்டார்கள்.

ஆயினும் ஒருவன் செல்வத்தின் மீது மிதமிஞ்சிய விருப்பத்தை வைப்பதனால் அதை ஒரு பொக்கிஷமாக்குகிறவன் மனதை பெரிய ஐசுவரியவானாக வேண்டுமென்ற எண்ணம் ஆக்கிரமித்துக் கொள்கிறது. மேலான காரியங்களில் பற்றுகளை வைப்பவன் உலகப்பிரகாரமான ஐசுவரியங்களை மிகவும் தாராளமாக கையாள்கிறதை அடையாளப்படுத்தி, பெருமளவில் சொத்துக்களை சேர்த்து வைப்பதையோ அல்லது பாதுகாத்து வைப்பதையோ தடுத்துவிடும். எஜமானருடைய வார்த்தை சொல்லுகிறதென்னவெனில், பூமிக்குரிய பொக்கிஷங்கள் மீது தன்னுடைய விருப்பங்களை வைக்கிறவன் கீழ்த்தரமானவனாக, சுயநலமுள்ளவனாக, பூமிக்குரியவனாக ஆகிவிடுவான்; மேலான காரியங்களில் தன் விருப்பங்களை வைப்பவன் அதற்கேற்றபடி பரத்துக்குரியவனாக, ஆவிக்குரியவனாக, ஆசீர்வதிக்கப்பட்டவனாக, தாராள குணமுடையவனாக மாறிவிடுவான். நமக்கு இரண்டு கண்கள் இருக்கின்றன. அவற்றை ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்பில் சரியாக ஏற்ற முறையில் ஒத்துப் போகச் செய்ய வில்லையெனில், பொருள்களைக் காண்கிற நம்முடைய பார்வை சிதைவுறும். நாம் காரியங்களை சரியான கோணத்தில் பார்க்கும் படிக்கு, அப்படிப்பட்ட சிரமத்தை சரிசெய்ய நாம் நாடுகிறோம். நம்முடைய அறிவின் கண்கள் விஷயத்திலும் இது அப்படியே இருக்கிறது. இது நிகழ்கால மற்றும் எதிர்கால நோக்கு நிலையையும், பூமிக்குரிய மற்றும் பரத்துக்குரிய பார்வையையும் கொண்டிருக்கிறது. அதனால் காரியங்களை நாம் அவற்றின் உண்மையான வெளிச்சத்தில் பார்க்கும்படியாக – எதிர்கால ஜீவியத்தின் மிகப்பெரும் மதிப்பை நிகழ்கால ஜீவியத்துடன் ஒப்பிட்டு காணும் படியாகவும், நாம் அவற்றை ஒழுங்காக சரிசெய்து கொள்வது முக்கியானதாயிருக்கிறது. அதற்கேற்றபடி நம்முடைய இருதயத்தின் விருப்பங்களை நிலைப்படுத்த வழிகாட்டவும், பொதுவாக வாழ்வின் எல்லா நலமான காரியங்களையும் ஞானமாக சம நிலைப்படுத்தவும் முடியும்.

இயற்கையான சரீரத்தில் கண்கள் இருளடைதல் அல்லது குருடாக்கப்படுவது போலவே, நம் அறிவின் கண்களும் அப்படி ஆவதற்கு வாய்ப்பு உள்ளது. நாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஒருமுறை கண்டு அனுபவித்த பிற்பாடு, இந்த குருட்டுத்தனம்நம்மீது வந்தால், நம்முடைய நிலை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கும். அந்த இருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! இப்போதும், நமக்கு இன்னொரு பாடம் இதே ரீதியில் இருக்கிறது. உலகப் பொருளை சேவிப்பது தற்கால வாழ்வில் நம்மை ஆசீர்வதிக்கும். ஆனால், நம்முடைய எதிர்கால நலன்களுக்கு அது ஆபத்து விளைவிப்பதாயிருக்கும். ஆனால் தேவனுக்கு ஊழியஞ்செய்தல் எதிர்கால நலன்களுக்கு நம்மை ஆயத்தப்படுத்தும். தேவனுக்கு கீழ்ப்படிவது, பாவமாகிய இன்பங்களை இழக்கும் நஷ்டத்தை உண்டாக்குவதாகவும், தற்காலத்தில் சட்டப் படியான ஆசீர்வாதத்தை நஷ்டப்படுத்துவாக இருந்தாலும், தேவனுக்கும் நீதிக்கும் உண்மையுள்ள ஊழியக்காரர்களாயிருக்கிறவர்களுக்கு இப்போதும் கூட ஒரு ஆசீர்வாதம் இருக்கிறது. அதோடுகூட எதிர்காலத்தின் மகிமையான நம்பிக்கையும் இருக்கிறது.

செல்வச் செழிப்பான மூப்பரான பாத்திரவானிலிருந்து, செல்வச் செழிப்பான பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் வரை இந்த ஒப்புமை உண்மையாகவே இருக்கிறது. பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்களுக்கான விசேஷித்த அழைப்பு உட்பட இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் தேவனுடைய ஒழுங்கு விதிமுறைகள் மாறவில்லை. ஆயிரவருடத்துக்கு முந்தின ஆபிரகாமின் வித்து என்ற வகையில் நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பங்குபெறுகிற வாக்குறுதி பெற்றுள்ள (லூக். 14:14), CEC வகுப்பினர் கடுமையான பரீட்சையின் கீழ் இருக்கின்றனர். யேகோவா தேவன், CEC வகுப்பாரை யோவேல் 2:28 மற்றும் ஏசா. 60:4-ல் சொல்லப்பட்டுள்ள குமாரர்களாகவும், சாலொமோனின் உன்னதப்பாட்டு 6:8-ன் கன்னியர்களாகவும் பார்க்கிறார். CEC வகுப்பினர் அநேகமாக புதுஉடன்படிக்கையின் கீழாக தங்களுக்குரிய ஆயிர வருட யுக ஸ்தானத்தையும், ஊழியத்தையும்பெற்றுக் கொள்வதில் 'பாத்திரவான்களுக்கு' கீழே முதலாவதாக முழுமையும் ஆயத்தமான வகுப்பாராக இருப்பார்கள். இந்த ஜீவியத்தில் அவர்கள் அடைந்து கொண்ட முன்னேற்றத்தின் காரணமாக, அவர்கள் தனிப்பட்ட முறையில் பரிசுத்த பெரும்பாதையில் முன்னேறிச் செல்லவும், குணப் பண்புகளில் பூரணத்தை அடையவும் நீண்டகாலம் ஆகாது. (PT'02, பக்கம் 44). லூக். 12:48 மிகத் தெளிவான விவரத்தைக் கொடுக்கிறது, "**எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும், மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ, அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்**" பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் இப்போது ஏற்றகால சத்தியத்தை பகிர்ந்தளிக்கிறார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. மேற்கோள்: "நாங்கள் இதற்காகவும், இது தொடர்பாகவும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் பெலனடைவதற்காகவும், நம்மெல்லாருடைய விசுவாசமும் தேவனுடைய வார்த்தையின் மீது

உறுதியாக ஸ்தாபிக்கப்படுவதற்காகவும், மிகவும் சரியான நேரத்தில் மென்மேலும் திறந்து கொடுக்கப்படும் நிகழ்கால சத்தியத்துக்காகவும், தேவனுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கும் நன்றி கூறி துதிக்கிறோம்." (PT'72; பக்கம் 76).




ஆயினும், நாம் இரண்டு எஜமான்களுக்குமிடையே (தேவன் மற்றும் சாத்தான்) ஒருவரைத் தேர்ந்தெடுப்பது அவசியமாயிருக்கிறது. நாம் இரண்டு பேருக்கும் ஊழியம் செய்ய முடியாது. இரண்டு பேரிடமிருந்தும் வெகுமதிகளை நாம் பெற முடியாது. யோசுவா செய்ததுபோல, "**நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்**" என்று நாம் தீர்மானிப்போமாக. ஏனெனில் அவருடைய வாக்குத்தத் தங்களுக்கு இசைவாக அவருடன் விசேஷித்த உறவுக் குள்ளாக நாம் வந்திருக்கிறபடியால் நம்முடைய எல்லா நலன்களையும் தேவனுக்கு ஒப்புவிக்கவும், நம்மால் முடிந்த அளவுக்கு முழுமையாக அவருக்கு கீழ்ப்படிதலுடன் இருக்கும்படியாக தீர்மானிக்கவும், அடுத்ததாக எல்லா சிருஷ்டிகள் மீதும் விசேஷமாக நம்மீதும் இருக்கிற தெய்வீக பராமரிப்பை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று எஜமானர் நம்மை வலியுறுத்துகிறார். அப்படிப்பட்டவர்கள் அவர்களுடைய பூமிக்குரிய காரியங்களைக் குறித்து எந்த கவலையும் இல்லாமல் தங்களுடைய பரம பிதாவிடமே தங்கள் நலன்கள் எல்லாவற்றையும் நம்பி ஒப்படைக்கலாம். நிகழ்கால ஜீவியத்துக்குரிய உணவு மற்றும் உடைகளைக் காட்டிலும் நம்முடைய நித்திய ஜீவன் மிக அதிக மதிப்புள்ளதாயிருக்கிறது. ஞானமுள்ளவர்களாயிருப் போமானால், நாம் எந்த விலை கொடுத்தாவது தற்கால ஜீவியத்தில் எந்த தியாகமும் செய்தாவது எதிர்கால ஜீவியத்தை அடைய முயற்சி செய்வோம். ஏசா. 65:20-ன் அடிப்படையில் சில கருத்துக்கள்: அப்படிப்பட்டவர்கள் மத்தியில் சந்தேகமின்றி யூத யுகம் மற்றும் சுவிசேஷ யுக அறுவடைகளின் போதிருந்த வேதபாரகர்கள், பரிசேயர்கள் அநேகர் இருப்பார்கள் (மத். 23:33). அவர்கள் தங்கள் பாவங்கள் மூலமாக விசேஷமாக தேவனுடைய சத்தியத்துக்கு எதிராக தங்கள் குணாம்சங்களை மிகவும் கெடுத்துக் கொண்டதால், அது, சிலருடைய விஷயங்களில் ஆயிரவருட யுக ஒழுங்கு முறைகளில் அவர்களை சீர்திருத்தம் செய்வதை கூடாத காரியமாக்கிவிடும். (E.Vol.16, பக்கம் 175).

தெரிந்தெடுப்புக்குட்பட்ட இரட்சிப்பின் கீழ் வருகிற பிரதிஷ்டையாளர்கள் அனைவரும் கிறிஸ்துவின் ஆயிர வருட யுக மத்தியஸ்தர் ஆட்சிக்கு முன்பாக தங்கள் அழைப்புக்குள்ளாக உண்மையுள்ளவர்களாக இருப்ப துடன், அவர்கள் அனைவரும் பல்வேறான சோதனைகள் மற்றும் பரீட்சைகளிலும் நிலைநிற்க வேண்டும். ஒவ்வொருவரும் இந்த கேள்வியைக் கேட்க வேண்டும். இப்படிப்பட்ட கஷ்டங்களைச் சகித்து ஜெயங்கொள்ளவும், அந்த வழியில் தொடர்ந்து செல்லவும் முழுமனதுடன் ஆயத்தமாயிருக்கிறேனா? சிலர் சோதனைகளைப் பெற்றுக் கொண்டு தங்கள் கிறிஸ்தவ ஓட்டத்தில் தடைகள் இருந்தாலும், வளர்ச்சியடையவும், முன்னேறிச் செல்லவும் கூடிய நிலைமையில் இருப்பார்கள். அதே சமயத்தில் மற்றவர்களோ அதில் ஒரு பகுதியை மட்டுமே செய்வார்கள், இன்னும் சிலரோ மனம் தளர்ந்து, கலப்பையை கைவிட்டுவிட்டு,திரும்பிப்பார்த்து, ஒட்டுமொத்தமாக உலகத்திற்குள்ளாக திரும்பிப் போய் பிதாவுக்குப் பிரியமற்றவர்களாகி விடுவார்கள். (லூக். 9:62). அநேகர் கர்த்தருக்கும், சத்தியத்துக்கும் ஊழியஞ்செய்வதையே விட்டுவிடுவார்கள். ஏனெனில், அவர்கள் சத்திய செய்தியையோ அல்லது இப்போது ஏற்றகால சத்தியத்தைப் பகிர்ந்தளிக்க தேவன் பயன்படுத்துகிற தூதுவர்களையோ ஏற்றுக் கொள்ளாதிருக்கிறார்கள்.

நம்முடைய நலன்களில் அக்கறை காட்டுவதற்கு நம்முடைய பரமபிதாவின் திறனைப் பொருத்தவரையில் இயற்கையில் வெளிப்படுகிற அவருடைய வல்லமை, ஞானம் மற்றும் கிருபையையும் ஆகாயத்துப் பறவை களுக்கும், காட்டிலுள்ள லீலிபுஷ்பங்களுக்கும் அவர் ஏற்பாடு செய்திருப்பதையும் நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய சிறந்த நலன்களுக்குத் தேவையானவற்றை ஏற்பாடு செய்ய அவர் அதற்கு சமமான வல்லமையை கொண்டிருக்கிறார் என்பதையும் நாம் உணரவேண்டும்; என்னதான் நேரிட்டாலும் விசுவாசம் தேவனை உறுதியாக நம்ப வேண்டும்.

நம்முடைய தற்கால அனுபவங்கள் எல்லா-வற்றையும், அதைப்போலவே நம்முடைய எதிர்கால வெகுமதிகளையும் அவருடைய ஞானம், அன்பு மற்றும் வல்லமைக்கு விட்டுவிட்டு, அவருடைய ஊழியத்தில் நாம் கவனமாயிருப்போமாக. லீலிபுஷ்பங்கள் மற்றும் பறவைகளுக்காக அக்கறை கொள்கிற தேவன், கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதன் மூலமாகவும், நம்முடைய ஜீவியங்களை பிரதிஷ்டை செய்வதன் மூலமாகவும் அவருடைய பிள்ளைகளான பிற்பாடு நமக்காக மிக அதிகமாக அக்கறை கொள்ள மாட்டார் என்று நாம் நினைக்கலாமா? அப்படியானால், பொதுவான உலகத்தார்

கவலைப்படுகிற காரியங்கள் பற்றிய எல்லா அச்ச முண்டாக்கும் கவலைகளை தூக்கி எறிந்து விடுவோமாக. கவலையில்லாமல் இருப்பது என்பது சரியான அக்கறையில்லாமலும், வேலையைக் கண்டறிந்து அதை செய்வதற்கு ஏற்ற ஜாக்கிரதையும் இல்லாமல் இருப்பது என்று அர்த்தமல்ல. நமக்கு மிகச் சிறந்த காரியங்கள் எது என்பதை நம்மைவிட நம்முடைய பிதாவானவனர் நன்கு அறிந்திருக்கிறார். அத்துடன் விசுவாசம் என்பது அவரை நம்பியிருப்பது மட்டுமல்ல, நம்முடைய சிறந்த நலன்களுக்கு ஏற்றது என்று அவர் கொடுப்பதை முழு மனதுடன் ஏற்றுக் கொள்வதுமாகும். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக நம்முடைய பிரதான நோக்கம் தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு இடத்தை அடைந்து கொள்ள நாடுவதாகவே இருக்க வேண்டும்; சிலர் பரத்துக்குரியவர்களும், பலர் பூமிக் குரியவர்களுமாக இருப்பர். இந்த ஓட்டத்தைத் தொடர்ந்து ஓடுகிறவன் எவனும் ஞானமாக செயல்படுவான் என்றும் அவனுடைய பூமிக்குரிய நலன்களை, அவனுடைய மேலான நன்மைக்காக தேவன் பார்த்துக் கொள்வார் என்றும் அதைக் குறித்து நமது எஜமானரில் உத்திரவாதத்தை நாம் பெற்றிருக்கிறோம். அப்படிச்செய்வதால் நம்முடைய ஜீவியங்கள் சமாதானம் மற்றும் சந்தோஷத்தால் முடிசூட்டப்பட்டு கர்த்தர் தம்மை நம்புகிறவர்-களுக்கு வாக்களித்திருக்கிறபடி, கர்த்தருக்குள் இளைப்பாறுவார்கள். ***




**<u>உமது கிருபையைத் தந்தருளும்</u>**


(துதிபாடல் 208)

*ஆ, கர்த்தாவே, உமது வாக்குத்தத்தம்*<br>*பண்ணப்பட்ட கிருபையைத் தாரும்,*<br>*பிரதிஷ்டை செய்யப்பட்ட என் இருதயத்தை நிரப்பும்!*<br>*உமக்காக வாழ்வதும் பேசுவதும் உழைப்பதுமே*<br>*இதுமுதல் என் பிரதான விருப்பமாயிருக்கும்.*

*உமது ஊழியத்தை சந்தோஷமாய் செய்கையில்,*<br>*குறைபாடுள்ள என் ஊழியத்தையும்*<br>*கிறிஸ்துவின் மூலம் நீர்*<br>*ஏற்றுக் கொள்வீர் என்ற எண்ணம்*<br>*என் ஆத்துமாவை ஆனந்தத்தால் நிறைக்கிறது.*

*கர்த்தாவே உமது கவனமுள்ள கண்கள்*<br>*சகலத்தையும் ஊடுருவிப் பார்க்கிறது;*<br>*உமது பிரசன்னம் எல்லாஇடங்களையும் நிரப்புகிறது;*<br>*என்னுடைய பங்கு எங்கு இருப்பினும், எப்போதும்,*<br>*என் ஆவி உம்மை விடாது பற்றிக் கொள்ளும்.*

*ஒவ்வொரு உலக காரியத்தையும் தள்ளிவிட்டு,*<br>*உமது அடைக்கலமான செட்டைகளின் கீழ்*<br>*பத்திரமாயிருப்பேன்,*<br>*என் தேவைகளை எல்லாம் உமக்குள் காண்கிறேன்,*<br>*இதுமுதல் அதுவே என் மிக இனிமையான*<br>*எண்ணமாயிருக்கும்.*




# ஓர் உபத்திரவ காலம்

## A time of trouble

தானியேலின் தீர்க்கதரிசனம் இன்னும் தெளிவாக அறிந்து கொள்ளப்படாத ஒரு முன் அறிவிப்பைக் கொண்டிருக் கிறது. "**யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும்**" என்று அவர் அறிவிக்கிறார். இயேசு இந்த தீர்க்கதரிசனத்தை உறுதிப்படுத்தியதோடு "**இனிமேலும் சம்பவியாததுமான**" என்ற வார்த்தைகளை கூட்டியுள்ளார். மகா உபத்திரவ காலம் நிச்சயம் வர வேண்டு மென்றால், அதுவே அதினுடைய வகையில் கடைசியானது என்று அறியும்போது அது ஆறுதலைத் தருகிறது. இதுவே கடைசி என்பது வெளிப்படையாக இருக்கிறது; ஏனென்றால் இது கடுமையான பாடங்களை தருவதால் இது மீண்டும் நடந்தேற தேவையில்லை. மேலும், வேதாகமத்தின்படி, உபத்திரவ கால முடிவின் சாம்பலின் மேல் மேசியாவின் ராஜ்யம் முழு வல்லமையோடும் மகிமையோடும் மனுக்குலத்தை ஆசீர்வதித்து பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் தூக்கிவிடும் மாபெரும் வேலையை நிறைவேற்றுவதற்கு ஸ்தாபிக்கப்படும். கிறிஸ்து அரசாளுவார்! சாத்தான் கட்டப்படுவான்! - வெளி. 20:1-4.

மனிதர்கள் இங்கும் அங்கும் ஓடி, அறிவு பெருகிப் போகும் போது கர்த்தருடைய ஜனங்களில் ஞானவான்களோ தெய்வீக திட்டத்தை இதற்கு முன்பு எப்பொழுதும் இல்லாதவாறு புரிந்து கொள்வார்கள் என்று தீர்க்கதரிசனம் அறிவிக்கிறது. "**தேவ ரகசியம் முடிவடைந்து விடும்**" முத்திரைகள் உடைக்கப்பட்டுவிடும்.

விடியற்காலம் தோன்றும். இயேசுவின் கன்னிகைகள் பற்றிய உவமை இந்த யுகத்தின் முடிவில் பிரயோகமாகும். தேவனுடைய ஜனங்களுக்கு மத்தியில் (அனைத்து கன்னிகைகள்) சில "**புத்தியுள்ளவர்கள்**" மட்டுமே தங்கள் தீவட்டிகளைத் தூண்டி ஆயத்தப்படுத்த முடியும். அதாவது வேதத்தை ஆராய்ந்தறிந்து "புரிந்து" கொள்ள முடியும். – மத். 25:1-12.

நாம் வந்து கொண்டிருக்கின்ற உபத்திரவத்தைப் பற்றி விவரிக்கத் தேவையில்லை. ஒவ்வொருவரும் அதனைக் காண்கிறார்கள். அது நிதி சம்பந்தமான இராட்சதர்கள், டிரஸ்டு முதலியவைகள் ஒரு பக்கத்திலும் மற்றொரு பக்கத்தில் இராட்சத தொழிலாளர் சங்கங்கள், என இராட்சதர்களுக்கிடையே நடக்க இருக்கும் ஓர் யுத்தமாகும். இரு தரப்பும் தயாராகிக் கொண்டு இருக்கிறது. இரு தரப்பும் முடிவுவரை போராட காத்திருக்கிறது. இரு கூட்டத்தாரும் வெற்றியை எதிர்பார்க்கின்றனர். இரு தரப்பினரும் ஏமாற்றம் அடைவார்கள் ஏனெனில் இருதரப்பினருமே தோல்வியடைவார்கள். இதன் முடிவு மிகவும் பயங்கரமானதாக இருக்கும் – "**இதுவரைக்கும் உண்டாயிராத ஓர் உபத்திரவ காலமாகிய**" – அராஜகக் குழப்பநிலை உண்டாகும் என்பதை வேதாகமம் முன்னதாகவே அறிவித்திருக்கிறது. உபத்திரவங்களின் விவரங்களைப் பற்றி சற்று அபூரண மாகத்தான் நம்மால் யூகிக்க முடியும். ஆனால் அது சமூகம், நிதி, அரசியல் மற்றும் மத சம்மந்தமான ஸ்தாபனங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பிரெஞ்சு புரட்சியின் அராஜகமும் மற்றும் A.D.70-ல் யூத ஜனத்தை கவிழ்த்துப்போட்ட அராஜகமும் விரைவில் நடக்கவிருப்பவைகளுக்கான வேதஆதார எடுத்துக் காட்டுகளாக இருக்கின்றன. மனத்தாழ்மையும் நீதியும்தான் பாதுகாப்பளிக்கக்கூடியது என்று வேதாகமம் புத்திமதி கூறுகிறது. செப்பனியா 2:3.

***

# இஸ்ரயேல் - பாலஸ்தீன ஒப்பந்தம்

The Israeli-Palestinian Agreement

**சமாதானத்திற்கான பாதையா? அல்லது பேரழிவுக்கான பாதையா?**

BS#753
Dec 1998

**எ**ங்களுடைய முந்தின பத்திரிக்கையில் கூறப் பட்டிருந்தபடி பிரதம மந்திரி பென்ஜமீன் நேத்தன் யாகூ-வும் சேர்மன் யாசர் அராபத்தும் அக்டோபர் மாதத்தில் கிழக்கு மேரிலான்டிலுள்ள வீய் பண்ணையில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இதில் வெள்ளை மாளிகை (அமெரிக்கா) மத்தியஸ்தம் செய்தது. இஸ்ரயேல் நிலம் கொடுப்பது மற்றும் பாலஸ்தீனிய அரசாங்கம் எவ்விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்தும் என்பதை கவனத்தில் வைத்து பேச்சு வார்த்தை நடைபெற்றது.

> **அந்நாளிலே நான் எருசலேமை சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன். அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக் கொள்வார்கள். சகரியா 12:3**

ஒரு வார காலம் நடைபெற்ற அந்த பேச்சு வார்த்தையின்போது அமெரிக்கா கூறிய ஆலோசனையின்படி மேற்கு கரையில் (வெஸ்ட்பேங்க்) கூடுதலாக 13% நிலத்தைக் கொடுக்குமாறு அதிபர் கிளிண்டன் திரு. நேத்தான்யாகூ அவர்களை அறிவுறுத்தினார். இந்த விட்டுக்கொடுத்தலை திரு. நேத்தான்யாகூ கடந்த காலத்தில் தீர்க்கமாக எதிர்த்தார். பாலஸ்தீனிய ஆணைக்குழு தீவிரவாதிகளின் தாக்குதலை எவ்வளவு திறமையாக அடக்க முடியும் என்ற இஸ்ரயேலரின் சந்தேகமே, வெகு காலமாக முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்த பாலஸ்தீனர்கள் ஆணைக்குழு ஒப்புக் கொண்டது மற்றும் மத்திய உளவு ஸ்தாபனத்தின் (சி.ஐ.ஏ) கண்காணிப்பு உதவி ஆகியவை பிரச்சனைக்குரிய நிலப்பகுதியை விட்டுக் கொடுக்க திரு. நேத்தான்யாகூவை சம்மதிக்க வைத்தது.

அந்த ஒப்பந்தம் மிகச் சிறந்ததாயினும் பலவீன மானதாகவே இருக்கிறது. பாலஸ்தீன குடியமைப்புகள் மற்றும் இஸ்ரயேலிலுள்ள பழமைவாதிகள் பிரிவு ஆகிய இருசாராரிடமிருந்தும் பலத்த எதிர்ப்பு வந்தது. வெகு காலமாக இஸ்ரயேலைத் தாக்கிக் கொண்டிருக்கும் ஹமாஸ் தீவிரவாத இயக்கத்தினர் பலரைக் கைது செய்ய தன்னுடைய பாதுகாப்பு படையினருக்கு திரு. யாசர் அராபத் கட்டளையிட்டார். அந்த ஹமாஸ் குழுவின் தலைவர்கள் அவருடைய உயிருக்கு மிரட்டல் விடுத்தார்கள். எருசலேமிலுள்ள ஒரு பஸ் நிறுத்தத்தில் குண்டு வெடித்து 20 பேர் காயமடைந்ததால் இஸ்ரயேலின் பாராளுமன்றம் நெசட் அந்த ஒப்பந்தத்திற்கு அனுமதியளிப்பதை தாமதப்படுத்தியது.

எப்போதுமே பயங்கரமாயிருக்கும் மத்திய கிழக்கில் இப்போதைய நிலைமை குறிப்பாக பயங்கரமாயிருக்கிறது. இருபக்கங்களிலும் புது ஒப்பந்தத்தால் ஏற்படுத்தப்பட்ட கொதிப்பு, அதற்கு அனுமதியளித்தாலும் அல்லது அனுமதி மறுத்தாலும் நீடித்திருக்கும். புதிதாக ஏற்படுத்தப்பட்ட பாலஸ்தீனத்திற்கு பிரதானமாகப் பொருளுதவி செய்யும் ஐரோப்பிய யூனியனும் (ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பு) மற்றும் ஐக்கிய நாடுகள் (அமெரிக்கா) – ஆகிய இரண்டும் நீண்டு கொண்டேயிருக்கும் இந்தப் பிரச்சனைக்கு சீக்கிரமாக ஒரு முடிவைக் காண விரும்புகின்றன. வேதாகம தீர்க்கதரிசனத்தின்படி சகல ஜனங்களுக்கும் இஸ்ரயேல் பாரமான கல்லாயிருப்பது உண்மைதான். (சகரி. 12:3).

***

Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**